Registered No. M-4483

Madras War Review { TAMIL 4-2-1944

# யுத்த சஞ்சிகை

மலர் IV | 1944-ம் ஞு பிப்ரவரிமீ 4உ, வெள்ளிக்கிழமை | இதழ் 22

## தாக்குகிறோம்

ஜெனரல் ஜார்ஜ் சி. மார்ஷல்

நேச நாடுகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. கிரேட் பிரிட்டனிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் நமது விமானிகள் ஜெர்மனியின் மூல ஸ்தானங்களை பலமாகத் தாக்குகின்றனர். பீரங்கிகளும், விமானங்களும், போக்குவரவிற்கான வண்டிகளும், தளவாடங்களும், எண்ணெய் கப்பல்கள், முதலிய ஒவ்வொரு வகை வசதிப் பொருள்களும் உலகம் முழுவதிலுமுள்ள எல்லாத் தளங்களிலும் சேகரிக்கப்படுகின்றன. நமது படை யெடுப்புக்கு, இவை பக்க பலமாக அமையும்.

ஜெனரல் ஜார்ஜ் சி. மார்ஷல், அமெரிக்கப் படை உத்தியோகத் தலைவர், வாஷிங்டனில், ஜனவரி மாதம் 31-ம் தேதி கூறியது.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகப்புப் படம் : ஜெனரல் சி. மார்ஷல் .. | 1 |
| தாக்குகிறோம் .. .. .. .. | 1 |
| முரசொலி .. .. .. .. | 2 |
| இத்தாலியில் கூர்க்கர்கள் வீரம் .. .. | 2 |
| தலையங்கம் : ரஷ்யாவில் பெரு வெற்றி .. | 3 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 4 |
| ரங்கூனை ஜப்பானியர் தாக்கிய முதல் நாள் விவரம் .. .. .. .. | 5 |
| மட சாம்பிராணி யார்? .. .. .. | 7 |
| மொபைல் கான்டீன் .. .. .. | 9 |
| யுத்த காலத்தில் அரசாங்க உதவி .. .. | 10 |
| சென்னை மக்களின் தாராளம் .. .. | 11 |
| "நாங்கள் எல்லாம் செய்கிறோம்" | 11 |
| வரனொலி நாட் குறிப்புகள் .. | 11 |
| யுத்த நாட் குறிப்புக்கள் .. .. .. | 12 |


# மு ர சொ லி

"ஜெர்மனிக்குப் போராட்டம் அதிகப்படுகிறது ; ஆனால் அதன் உற்பத்தி சக்தி நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. ஆகையினால் தான், இப்போது ஜெர்மனியின் நிலைமை மிகவும் நெருக்கடியா யிருக்கிறதென்று சொல்லுகிறோம்."

—சால்போர்ன் பிரபு,
பிரிட்டிஷ் பொருளாதார யுத்த மந்திரி, ஜனவரி 26-ம் தேதி கூறியது.

* * * * * *

"முடிவான போராட்டத்தை முன்னிட்டு ஜெர்மன் துருப்புகள் ரோமாபுரிக்கு வெளிப்பக்கத்தில் ஒன்று கூடுகின்றன. எல்லாம் ஆச்சரியப் படத்தக்கபடி நமக்கு நன்மையாகவே நடந்து கொண்டிருக்கின்றன.

—ஜெனரல் அலெக்சாண்டர்,
இத்தாலியிலுள்ள பிரதம நேச நாட்டுப் படைத் தலைவர், ஜனவரி 28-ம் தேதி கூறியது.

* * * * * *

பசிபிக் போர் முனையிலுள்ள நேச தேச விமானப் படைகளையும் தரைப் படைகளையும் கடுமையாகத் தாக்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டு ஜப்பானியர்கள் தம் பெரும் கப்பற் படைகளை இருப்பில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

—ரியர் அட்மிரல் ஆஸ்போர்ன் ஆர். ஹார்டிசன்,
ஜனவரி 27-ம் தேதி கூறியது.

* * * * * *

"ஜப்பானிய வியாபாரக் கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு மூழ்கடிக்கப்பட்டது."

—ஹாரி எஸ். ட்ருமான்,
அமெரிக்க செனடர், ஜனவரி 29-ம் தேதி கூறியது.

* * * * * *

# இத்தாலியில் கூர்க்கர்கள் வீரம்

கூர்க்க மோட்டார் படை நெடுநாட்கள் பாலை வனத்தில் போராடிக் கொண்டிருந்தாலும், மலைப் போராட்டத்தையும் மறந்துவிடவில்லை. எகிப்திலும் லிபியாவிலும் பாலைவனத்தில் எவ்வளவு எளிதாகப் போராடினார்களோ, அதுபோலவே இப்போது இத்தாலிய மலைகளிலும் போராடுகிறார்கள்.

மத்திய இத்தாலியிலுள்ள பனிக்கட்டி மேவிய மலைச்சாரல்களில் ஜெர்மன் படைகளை எதிர்த்து 5-வது ராயல் கூர்க்கத் துப்பாக்கிப் படையினர் முதன் முதல் போரிட்ட போது, எவ்வளவு வீரத்தோடு போராடினார்களென்று விவரித்து படைத் தலைவர் குறிப்பிடுகிறார்.

தம் டிவிஷன் படைகள் முன்னேற ஒட்டாதபடி எதிரிப் படைகள் தடுத்துக் கொண்டிருந்தன. ஆகவே, அவற்றைப் பக்கவாட்டில் வந்து தாக்க வேண்டிய பொறுப்பு இந்தக் கூர்க்கப் படைக்கு ஏற்பட்டது. எதிரிகளோ கடுமையாக வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கினார்கள். இதன் பயனாக, படைத் தலைவரும் பல உத்தியோகஸ்தர்களும் காயப்பட்டனர். இருந்தபோதிலும் கூர்க்கர்கள் கடுமையாக எதிரிகளைத் தாக்கி வென்றனர். டிவிஷன் படைத் தலைவரும் பெரும் படைத் தலைவரும், மலைகளில் பல கஷ்டங்களுக்கிடையே வெகு வேகமாக முன்னேறித் தாக்கி வெற்றி பெற்றது பற்றி, அவர்களைப் பெரிதும் பாராட்டினார்கள்.

தாக்குதலை நிறுத்தும்படி கட்டளை பிறப்பித்த பிறகுங் கூட, எதிரிகளை மேல்விழுந்து தாக்கும் இவர்களுடைய வீராவேசத்தைக் கட்டுபபடுத்த உத்தியோகஸ்தர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. கூர்க்கர்கள் தம் ஈட்டிகளைக் கொண்டும் கத்திகளைக் கொண்டும் ஜெர்மன் படைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறினார்கள்.

"வலுவுள்ள ஜெர்மன் சோல்ஜர்களை, அவர்களுடைய மறைவிடங்களிலிருந்து வெளியே இழுத்து வந்து, வதைத்துக் கொன்றார்கள். விரைந்து போக முடியாதிருந்த இளைஞர்களான ஜெர்மானியர்களை அங்கங்கேயே கைத்துபபாக்கிகளால் சுட்டுத் தள்ளினார்கள்," என்று அந்த உத்தியோகஸ்தர் கூறினார்.

இந்தப் போராட்டத்திற்கு முன்னதாக, இந்த கூர்க்கப் படையினர் கூட்டங் கூட்டமாக ஜெர்மன் பாசறைகளுக்குப் பின்புரமாக ரோந்து போய் அவர்களுக்கு இடைவிடாது தொல்லை கொடுத்துக் கொண்டே யிருந்தார்கள். ஒரு சமயம் எதிரி தன் முழு பலத்தையுங் கொண்டு கூர்க்க பட்டாளத்தின் முக்கியமான பகுதியைத் தாக்கிக் கொண்டிருக்கும் நெருக்கடியான நிலைமையில், லான்ஸ் நாயிக் பகத்பகதூர் தபா தன் படையினரைக் கொண்டு பின்புரம் வந்து தன் வசம், போதுமான வெடிமருந்துகளும் இல்லாத சமயத்தில், கத்திகளைக் கொண்டு தாக்கினார். எதிரி சிதறியோட வேண்டியதாயிற்று.

துப்பாக்கிப் படையைச் சேர்ந்த லங்கு புன் ஒரு இளைஞர். முன் ரோந்து போகும் சாரணராக அவர் வேலை செய்து கொண்டிருக்கும் போது, அவரது தோளில் காயம் பட்டது. அவர் நேரே தன் ஈட்டியுடன் பாய்ந்து போய்த் தன்னை காயப்படுத்தியவனைக் குத்திக் கொன்றார். எதிரிகள் ஓட்டமெடுத்தனர். எதிரிகள் ஓட்ட மெடுக்கும் வரை தன் காயத்திற்கு மருந்து கட்டிக்கொள்ள அவர் மறுத்து விட்டார். பிறகு தன் வசமிருந்த மருந்து மட்டும் வைத்துக் கட்டிக் கொண்டு, போர் முனையிலேயே இருந்து, தான் போராட வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இதுபோலவே தான், ஒரு சுபேதார் மேஜருடைய மகனான நாயிக் பால் பகதூர் சிங் போராட்டத்தில் கொல்லப்பட்டதாகச் சொன்ன போதும், அந்தப் படையினர் வீரம் கொஞ்சமும் தளர்ச்சி யடையவில்லை. இச் செய்தி சுபேதார் மேஜர் காதுக்கு எட்டியவுடனே, "பாதகமில்லை ; பட்டாளத்தின் நற்பெயர் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினாராம்.

# யுத்த சஞ்சிகை

## வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஞூ பிப்ரவரிமீ 4உ, வெள்ளிக்கிழமை | இதழ் 22

## ரஷ்யாவில் பெரு வெற்றி

லெனின்கிராடருகில் நடந்து கொண்டிருந்த போராட்டம் முடிந்து விட்டது. இல்மென் ஏரியிலிருந்து லடோகா ஏரி வரையிலு மிருந்த ஜெர்மன் படைகள் விரட்டப்பட்டு விட்டன. ஓல்கோ ஆற்றுப் போர் முனை எல்கின் ஏரிக் கரையிலுள்ள நொவேக்ரோட்டிலிருந்து லெடோகா ஏரி வரை இருந்து வந்தது. இது இப்போது போரரங்கமாக இல்லை. இந்தப் பகுதியில் கிடுக்கிப் போராட்டத்தைக் கைக் கொண்டு ஜெர்மன் படைகளை, செம்படைகள் நெருக்கிக் கொண்டு வருகின்றன. எஸ்டோனியா வழியாக ஜெர்மன் படைகள் தப்பி யோடப் பார்க்கின்றன. என்றாலும், நார்வாவுக்குப் போகும் ரயில்வே லைன் வெட்டப்பட்டு விட்டது. எனவே, அப்படைகள் மேற்கு நோக்கிப் போக முடியவில்லை. எஸ்டோனியாவை நோக்கித் தப்பி யோடப் பார்க்கும் ஜெர்மன் படைகளை விரட்டிக் கொண்டே, ரஷியப் படைகளும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

நிற்க, தென் பகுதியில் இல்வென் ஏரிக் கரையில் உள்ள போர் முனையில், ஜெர்மானியர்கள் மீண்டும் திருப்பி விரட்டப் படுகிறார்கள். இங்கே லூகா என்னும் முக்கியமானதோர் ரயில்வே ஜங்ஷன் இருக்கிறது. லெனின்கிராடிலிருந்து சோகோவுக்குப் போகும் முக்கியமான ரயில்வே லைனை, நொவோகொரோட் போகும் கிளை ரயிலும் இங்கே தான் சந்திக்கின்றது. பின் வாங்கியோடும் ஜெர்மன் படைகளுக்கு ஒரே ஒரு வழி தானுண்டு. இது தான் லூகாவிலிருந்து சோகோவுக்குப் போவது, இந்த முக்கியமான ரயில்வே லைனையும் கூட ரஷ்யர்கள் நாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது ஜெர்மானியர்கள் இனித் தப்பியோட அவர்களுக்கு இருந்த ஒரு வழியும் இப்போது இல்லாது போய் விட்டது. ஓல்கோ போர் முனையில் மிகுந்திருந்த ஜெர்மன் படையினர் இந்த லைனுக்குக் கீழ் திசையில் ஓடிப் போக வேண்டும். லூயூகாவுக்கும் காரஸ்னோக்வார்டெஸ்குக்கும் தப்பி யோடலாமென்றாலும், பாதைகளெல்லாம் காடுகள் நிறைந்த சதுப்பு நிலம். இதன் வழியாகத் தான் ஜெர்மன் படைகள் பின் வாங்கித் தப்பி யோடுகின்றன வென்றால், அவர்களுடைய கஷ்டங்களைச் சொல்ல வேண்டியதில்லை. லெனின்கிராடுக்குத் தெற்கே அங்குள்ள பாகமெல்லாம் சிக்கலான இடந்தான். ரஷ்யர்கள் அந்த ஊர்க்காரர்களானதால், அவர்களுக்கு எல்லா உளவுகளும் தெரியும்; ஆகவே தான் அவர்களுக்கு சற்று இலகுவா யிருக்கிறது. எதிரிகளைப் பின்புறம் வந்து தாக்குவது தான், ரஷ்யர்கள் எப்போதும் கைக்கொண்ட முறை. எதிரிகளின் போக்கு வரவு சாதனங்க ளெல்லாம் துண்டிக்கப்பட்டு விட்டன. எதிரிகள் ஓரிடத்திலிருந்து போக வர முடியாமற் போய்விட்டது. லெனின்கிராட் போர் முனையில் எதிரிகளுக்கு மிகப் பெரும் சேதம் ஏற்பட்டதாக மாஸ்கோ அறிக்கை யொன்று கூறுகிறது.

இப்படிப்பட்ட பகுதிகளில் ரயில் போக்கு வரவு துண்டிக்கப்பட்டு விட்டால், எதிரிகளின் பாடு பெரிதும் திண்டாட்டமே. ஜெர்மன் படைகளையும் அவற்றின் தளங்களையும் இணைக்கும் எல்லாவற்றையும் துண்டித்து விட வேண்டு மென்பது தான் ரஷ்யர்களின் எண்ணம். இந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். நொவோகொரோட் ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இதை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இதற்கு மேல் அவர்கள் முன்னேற்றம் மேலும் அதிகப்பட்டது. காட்சினாவையும் ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்கள். லெனின்கிராட் போர் முனையின் இருகோடிகளிலும் ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் அரும்பாடு பட்டு வென்று காப்பாற்றிக் கொண்டிருந்த லெனின்கிராட் என்னும் முக்கியமான பகுதியை இழக்கும் போது, அவர்கள் அடைந்த நஷ்டம் கொஞ்சமல்ல.

க்ராஸ்னோக்வார்டெஸ்க், டோஸ்னோ ஆகிய இரண்டு இடங்களையும் ரஷ்யர் வளைத்து கொண்டனர். நார்வா ரயில்வே லைனும் துண்டிக்கப் பட்டுவிட்டது. டோஸ்னோ வீழ்ந்த பிறகு, செம்படைகள் லெனின்கிராட் மாஸ்கோ லைனை நோக்கி முன்னேறிப் போயின. க்யூபான், சுடோவோ என்னும் இரண்டு ரயில்வே ஜங்ஷன்களையுங் கூட, ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். லெனின்கிராட்-நோ ரயில்வேயுங் கூடத் துண்டிக்கப்பட்டு விட்டது.

இப்போது ஷிம்ஸ்க் என்னும் மற்றொரு ரயில்வே ஜங்ஷனையும் கைப்பற்றிக் கொள்ள, ரஷ்யப் படைகள் முயன்று கொண்டிருக்கின்றன. இதைக் கைப்பற்றிவிட்டால், ஸ்டாரயா ராசா என்னும் ஜெர்மன் கோட்டை பெரும் ஆபத்திற் குள்ளாக நேரும். இந்தக் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கத்தோடு ரஷ்யர்கள் சென்ற 1942-ம் வருஷம் முயற்சித்தார்கள். என்றாலும், அம்முயற்சி அப்போது பலிக்கவில்லை. இப்போது சரியானபடி பொறி அமைக்கப்பட்டு விட்டது. இதற்குத் தப்ப ஜெர்மானியர்களால் முடியாது என்று தான் சொல்ல வேண்டும். விடெப்ஸக் என்னும் நகரம் ஒன்று தான் பாக்கி. இதையும் ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்களானால், வடபகுதியில் ஜெர்மானியர்களின் நிலைமை, மகா மோசமாகி விடும். விடெப்ஸ்குக்கு வடக்கே யுள்ள நோவோஸோகோல்னிகியையுங் கூட, ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தப் பகுதிகளில் மேலும் ரஷ்யர்கள் தாக்கலா மென்று தெரிகிறது.

வெள்ளை ரஷ்யப் போர்முனையிலும் போராட்டம் நடைபெறுகிறது.

# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பதினோராவது ஆண்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. அப்போது ஹிட்லர் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அதில் போல்ஷிவிசத்தைக் குறித்து நேச நாட்டினருக்குள் குரோதத்தை யுண்டாக்க மீண்டும் முயற்சிக்கிறார். அச்சு நாடுகளின் அழிவு காலம் அணுகிவிட்டது எனத் தக்க அச்சம் அவருடைய பிரசங்கம் முழுவதிலும் தெளிவாகக் காணப்படுகிறது. அவர் கூறியதாவது :—

"ஐரோப்பாவைக் காப்பாற்ற வேண்டு மென்னும் பிரச்சினை முழுதும் ஜெர்மனியையே பொறுத்தது. ஜெர்மன் மக்களின் மாபெரும் மகத்தான வெற்றியைக் கொண்டு தான் இந்த யுத்தம் முடிவடையும்."

ஆனால், அவருடைய பிரசங்கத்தின் ஒவ்வொரு வாசகத்திலும், ஜெர்மனிக்கு வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று பாசாங்கு செய்கிறார் என்பதை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கடைசி காலத்திலுங் கூட, பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் மனக் கசப்புண்டாக்கிவிட அவர் அதிதீவிர முயற்சி செய்வதிலிருந்தே, நேச நாட்டினருடைய ஒற்றுமைக்கு முன்னே ஜெர்மன் இராணுவங்கள் நிலைக்க முடியாதென்று அவர் உள்ளூர உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டப் போதுமானது. ரஷ்யா வெற்றி பெறுமானால், ஐரோப்பா முழுவதும் மகா பயங்கரமான நிலைமை நிலவுமென்று பிரமாதப்படுத்துகிறார். இது பற்றி பிரிட்டனுக்கு உரையேற்றப் பார்க்கிறார். அப்போது தான் ரஷ்யாவோடு பிரிட்டன் விரோதம் கொள்ளுமென்று நம்புகிறார். ஏனென்றால், யுத்தம் முடிந்த பிறகு, மா பலம் பொருந்தியிருக்கும் சோவியத் அரசாங்கத்தோடு போர் தொடுக்கக் கூடிய நிலைமையில் பிரிட்டன் இருக்காதாம். அப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குத் தான் பெரும் நஷ்டம் ஏற்படுமாம். ஆகவே இப்படிப்பட்ட கடுமையான தோர் வேலைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள பிரிட்டனால் ஒரு போதும் முடியாதென்று இதோபதேசஞ் செய்கிறார் ஹிட்லர். இந்தப் பாச்சா பலிக்காதென்று ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தாலும், கடைசியாக முயற்சித்துப் பார்ப்போமென்று அவர் முயற்சித்திருக்கிறார்.

இந்த யுத்தத்தின் கடைசி முடிவைக் குறித்து தன்னையும் அறியாமலேயே அவர் உண்மையை ஒப்புக் கொள்ளுகிறார். அவர் கூறியதாவது :—

"உலக சரித்திரத்திலேயே இதுவரை ஏற்பட்ட யுத்தங்களைவிட, இந்த யுத்தத்தில் வேறு வகைகளில் வேலை செய்ய முடியாது."

இதற்கு முன்பு நடைபெற்ற அக்கிரம யுத்தங்களெல்லாம் ஒரே வகையில் தான் முடிவடைந்தன. அதாவது அக்கிரமக்காரர்கள் தோல்வியுற்று அவமான மடைந்தார்கள். அழகான மொழிகளைக் கொண்டு, தன் நாட்டு மக்களின் மனோபலத்தை ஹிட்லர் உறுதிப்படுத்தப் பார்க்கிறார். அவர் கூறியதாவது :—

"நம்மில் மிகச் சிறந்தவர்களில் சிலர் இந்தச் சூருவளிக் காற்றில் சிக்கி மாய்ந்தனர். ஆனால் இந்தச் சூருவளிக் காற்று ஏதோ ஒரு நாள் ஓயத் தான் வேண்டும். அப்போது, இருண்டிருந்த மேகங்கள் விலகும். சூரியன் மீண்டும் ஒளி வீசுவான். மகா கடுமையான காலத்தில் தம் கடமையைத் தவறாது நிறைவேற்றியவர்கள், அதனால் பலனடையத் தான் செய்வார்கள்."

இது பற்றி "**நியூ யார்க் டைம்ஸ்**" பத்திரிகை கூறுவதாவது :—

"இந்தச் சூரியன் மேற்கே ஜெர்மனியை நோக்கிப் போகிறது. ரஷ்ய பீரங்கிகள் முன்னேறி வந்து முழங்கும் சத்தத்தைக் கேட்டு மேலே கிளம்புகிறது. பிறகு இடது பக்கத்திலுள்ள மற்றொரு முழக்கத்தில் போய் இறங்குகிறது. அங்கே தான் பிரிட்டிஷ் படைகளும் தளவாடங்களும் திரட்டப் படுகின்றன."

'போல்ஷிவிசம்' வந்து மேவி நாடுகளை அழித்து விடுமென்று ஹிட்லர் கூவும் மாயக் கூக்குரலைக் கேட்டு பிரிட்டனின் போக்கு மாறிவிட மாட்டாது. நாஜிஸத்தை அடியோடு அழிக்க வேண்டும் என்னும் பிரிட்டிஷார் கடமையை அவர்கள் நிறைவேற்றுகிற வரை, அவர்களுடைய மனோநிலையைக் குலைக்க ஒருவராலும் முடியாது. ஐரோப்பிய ஜெர்மனியைத் தாக்குவதற்கு முழு பலத்தோடும் ஆயத்தங்கள் நடை பெறுகின்றன. இந்தச் சமயத்தில், யாருக்கு வெற்றி தோல்வி என்னும் கேள்விக்கே இடமில்லாமற் செய்துவிட வேண்டும் என்னும் நிலைமையில் நேச நாடுகளிருக்கின்றன. இப்படிப்பட்ட சமயத்தில், எது சிறந்ததோர் யுத்த தந்திர முறையாக அமையுமென்று சுமார் 25 வருஷங்களுக்கு முன்னதாகவே, மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டிருக்கிறார். சென்ற மகா யுத்த காலத்தில் 1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இம்பீரியல் யுத்த சபைக்கு அவர் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது :—

"இப்படிப்பட்டதோர் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானால், மிகக் குறைந்த காலத்திற்குள்ளாக, வெகு அதிகமான யுத்த முயற்சி செய்யப்பட வேண்டும். உயிர்களைக் காப்பாற்ற ஒரே வழி தானுண்டு. அது தான் விரைவில் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத பெரும் உயர்வு நமக்குண்டு என்பதை நாம் நிலை நாட்டிக் கொள்ள வேண்டுவது."

எவற்றில் நாம் உயர்வுகள் பெற வேண்டும்? அதாவது மூன்று வகைகளில் நாம் உயர்வுகள் பெறவேண்டும். (1) போராடும் படைகளில்; (2) தளவாடங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில்; (3) மனோபலத்தில். முதலாவது படை சம்பந்தமாக, மிகப் பெரிய தோர் இராணுவ ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் படைகள் "கிளம்பு" என்னும் கட்டளையை எதிர் நோக்கிக் கொண்டு எப்போதும் ஆயத்தமா யிருக்கின்றன. சிசிலியை இந்தப் படைகள் தாக்கியது, அதற்குப் பிறகு ஏற்பட விருந்த இத்தாலியத் தாக்குதலுக்கு, ஒரு கடைசி ஒத்திகை போலிருந்தது. சிசிலியைத் தாக்கும்போது எல்லா வகைப்பட்ட கப்பல்களையும் சேர்த்துப் பார்த்தால், சுமார் 3,000 கப்பல்கள் பங்கு கொண்டன வென்று இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். ஐரோப்பாவைத் தாக்க வேண்டுமானால், எவ்வளவு பெரிய கப்பற் படை தேவைப்படும் என்று எளிதில் அனுமானித்துக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினை எவ்வளவு பரந்தது என்பதுபற்றி, அமெரிக்க அரசாங்க உதவி மந்திரி ஒருவாறு கூறி யிருக்கிறார். அவர் கூறியதாவது :—

"அமெரிக்காவில் திட்ட மிட்டிருக்கிறபடி 58.000 கப்பல்கள் கட்டப் படுவதைப் பொருததுத்தான் 1944-ம வருஷத்திய போராட்டத்தின் வெற்றி அமையும்."

நேச நாடுகளின் கப்பற் கட்டும் திட்டம் எவ்வளவு விரைவில் நிறைவேற்றப்படுகிறது என்பது பற்றி, ஹிட்லர் மிகுந்த அச்சத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறார். ஐரோப்பாவின் மேற்கு பகுதியிலும் வடமேற்குப் பகுதியிலும் உள்ள அரண்களைப் பார்வை யிட்டு வரும்படி ரோமலை அவர் அனுப்பியதி லிருந்தே, அவர் எவ்வளவு தூரம் அச்சமும் கவலையுங் கொண்டிருக்கிறாரென்று விளங்குகிறது. ஜெர்மன் சுரங்கங்களைப் பரத்தும் படைகளுக்குத் தலைமை ஸ்தானம் ஹெலிகோலான்ட். இங்குள்ள அரண்களையும் பலப்படுத்த வேண்டு மென்று ஹிட்லர் முடிவு செய்திருக்கிறார். இதற்குக் காரணம் அவர் கொண்டுள்ள அச்சம் என்று தெளிவாகத் தெரிகிறது. ஜெர்மனியின் மகத்தான போர்க் கப்பலான "ஸ்கான்ஹர்ஸ்ட்"டும் பிஸ்கோ விரிகுடாவில் மூழ்கடிக்கப்பட்ட 3 நாசகாரி கப்பல்களும் ஜெர்மனிக்கு நஷ்டமான பிறகு, அதன் பாதுகாப்பு வெகுவாகச் சீர்குலைந்து விட்டதென்று வாசகர்கள் அறிவார்கள்.

உற்பத்தி சம்பந்தமாக, நேசநாட்டார் திட்டமிட்டதை விட வெகு அதிகமாகவே உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். ஜெர்மன் உற்பத்தி வேகத்தைத் தணிக்க நேச நாட்டினர் பலவகைகளிலும் தடைகள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஜெர்மன் உற்பத்தி ஸ்தானங்களை நாசஞ் செய்வதில் நேச நாட்டு விமானப் படைகள் அருமையான வேலை செய்திருக்கின்றன. ஜெர்மனி மீது நேசநாட்டு விமானப்படைத் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இரவு வேளைகளில் காலந் தாழாமல் பிரிட்டிஷ் விமானப் படையும் பகற் காலங்களில் அமெரிக்க விமானப் படையும் பெருங் கூட்டங் கூட்டமாக வந்து ஏராளமான வெடி குண்டுகளை ஜெர்மன் தொழிற்சாலைகள் மீது வீசி நாசப்படுத்திப் போகின்றன. பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு, ஹிட்லரும் கடைசியாக ஒரு எதிர்ப்புத் தாக்குதலை ஆரம்பிக்கக் கூடும். இப்போது, ஐரோப்பாவிலிருந்து பிரிட்டன் மீது படை யெடுக்க அவ்வளவாகச் சந்தர்ப்பம் கிடையாது. ஆனால் தன் விமானப் படைகளைக் கொண்டு ஹிட்லர் பிரிட்டனைத் தாக்கவுங் கூடுமென்று பிரிட்டிஷ் யுத்த உதவி மந்திரி லார்ட் க்ராப்ட் கூறுகிறார். செய்வ தின்னதென்று தெரியாமல் திகைத்திருக்கக்

(10-ம் பக்கம் பார்க்க.)




ஜெலம், ராயல் இந்திய இராணுவப் பள்ளிக்கூடக் கட்டடமான ''ஆக்கின்லெக் ஹௌஸு''க்கு மேன்மை தங்கிய பிரதம படைத்தலைவர் சமீபத்தில் விஜயம் செய்தார்.

# ரங்கூனை ஜப்பானியர் தாக்கிய முதல் நாள் விவரம்

## நேரில் கண்டவர் கூறுவது

**(மிஸ்டர் சி. எஸ். பூஷணம், எப்.ஆர்.எச்.எஸ்., எம்.ஆர்.ஏ.எஸ்.)**

சமீபத்தில் சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து மிஸ்டர் பூஷணம் ஆங்கிலத்தில் ஒலிபரப்பிய பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 23-ம் தேதி தான் முதன் முதல் ஜப்பானியர்கள் ரங்கூனைத் தாக்கினார்கள். ஜப்பானியர்கள் வெடி குண்டுகளைக் கொண்டு ஏன் தாக்கினார்கள் ? அவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் ? பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் அப்போது எப்படிப் போராடின ? இந்தக் கேள்விகளுக்கு, நான் நேர்முகமாக அறிந்தவற்றைக் கொண்டும், 40 வருஷங்களாக பர்மாவில் நான் இருந்து வந்த அனுபவத்தைக் கொண்டும், விடையளிக்க முயற்சிக்கிறேன்.

பர்மா என் ஸ்வீகார நாடென்று சொல்லலாம். அதனிடம் எனக்கு அவ்வளவு அன்பு உண்டு. இன்பம் நிறைந்த நாடு. புன்முறுவல் பூத்த முகங்கள் மிக உண்டு. பயிர் வளம் மிக்கது. தங்கம் விளையும் தலம். இது யுத்தத்திற்கு முன்பு அந்நாட்டின் நிலைமை.

நான் 6 வயது பையனாக விருக்கும்போது ரங்கூனுக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போது அது ஒரு சர்வ சாதாரணமான பட்டணமா யிருந்தது. என்றாலும் பல நாட்டினரும் அங்கே வசித்து வந்தார்கள். அங்கிருந்த ரோடுகள், சாலைகள், தண்ணீர் சப்ளைமுறை, சுகாதாரம் முதலிய பல வசதிகளும் குறிப்பிடத் தக்கன. முனிசிபாலிட்டியா யிருந்து பிறகு கார்ப்பொரேஷன் ஆனது. "டௌன் லாண்ட் ரிக்லெமேஷன் ஒர்க்ஸுக்குப்" பதிலாக ஏற்பட்ட "ரெங்கூன் டெவெலப்மெண்ட் டிரஸ்ட்" நகரப்புரங்களிலுள்ள பகுதிகளைச் சீர்திருத்தி நகரத்தைப் போலாக்கினர். கீழ்த் தரமான மக்கள் வசிக்கும் பல பகுதிகளில் சீர்திருந்தப் பெற்ற அழகிய விடுதிகள் இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன. அகன்று நீண்ட ரோடுகளின் இரு புரங்களில், அழகிய மாளிகைகள் கட்டப்பட்டன. மிகச் சிறந்த துறைமுக மொன்று அங்கே இருந்தது. பெரிய பெரிய கப்பல்க ளெல்லாம் அங்கே தங்கலாம். தற்கால முறைப்படி பல இறங்கு துறைகள் அங்கே கட்டப்பட்டன. அதன் பயனாக அத்துறைமுகத்தின் பொலிவு மேம்பட்டது. அன்றியும் பிரம்மாண்டமான துறைமுகக் கமிஷனருடைய காரியாலயக் கட்டடமும் கட்டப்பட்டது. ரங்கூன் பர்மாவின் தலைநகரமா யிருந்தது. வெகு தூரத்திலிருந்து மக்கள் அங்கே குடி புகுந்தனர். இயற்கைப் பொருட்கள் அங்கே ஏராளம். மலைகளும் சம பூமிகளும் வியாபாரப் பொருட்களை ஏராளமாய் உதவின. வெளி நாடுகளி லிருந்து முதலாளிகளும் தொழிலாளிகளும் வந்து நிறைந்தனர். இதில் இந்தியாவும் நிறையப் பங்குகொண்டது.

உள்நாட்டில் சங்கிலி கோர்த்தது போல ரயில்வேக்களும் படகுகள் போக்குவரவிற் கேற்ற கால்வாய்க்களும் அமைந்தன. பௌத்த கோவில்களும், மலைகளும், பள்ளத் தாக்குகளும், ஆறுகளும், வயல்களும், ஏரிகளும் அந்நாட்டின் அழகை அதிகப்படுத்தின. பருவ மழைகளும், சாதகமான சீதோஷ்ண நிலையும் அங்கே உண்டு. எனவே, மிகச் சிறந்த சாகுபடியாகிறது. இது பர்மாவின் தேவையைவிட மிகவும் அதிகம். எனவே, இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதியானது. ஆறுகள் பெரும்பாலும் கப்பல் போக்குவரவிற்கு ஏற்றவை. ஆற்றங் கரைகளிலே ஆங்காங்கே ஸ்டேஷன்கள் ஏற்பட்டிருந்தன. ஆகையால், போக்கு வரவு மிகவும் எளிதாயிருந்தது. வருவாயும் சுகாதாரமும் ஓங்கியது. லட்சுமி தேவி இதைத் தான் தன் இருப்பிடமாகக் கொண்டாளோ என்னவோ ? அவ்வளவு அழகாகத் தோன்றியது அந்நாடு.

### நேசப் படைகளுக்குப் பாராட்டு

ஜப்பானியருடைய கண்கள் சிறியவையாயினும் கூரியவை. செல்வங் கொழிக்கும் இந்நாட்டின் மீது அவர்களுடைய கண்கள் பாய்ந்தன. அவர்கள் உலகத்தையே வென்று கட்டியாள வேண்டுமென்னும் நோக்க முள்ளவர்கள். இந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளுவதற்கு பர்மா ஒரு முக்கியமான கேந்திர ஸ்தானம். அதிர்ஷ்டமும் அவர்கள் பக்கமிருந்தது. வேறிடத்தில் ஜெர்மானியர்களோடு மகா கடுமையாக, வாழ்வதா சாவதா எனத் தக்க முறையில், பிரிட்டிஷ் படைகள் போராடிக் கொண்டிருந்தன. இது உண்மையிலேயே ஜப்பானியர்களுக்கு ஏற்ற சந்தர்ப்பந் தான். தினவுக் கொண்டிருந்த அவர்களுடைய கை நீண்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி காரியங்கள் எளிதில் நடைபெறவில்லை. ரங்கூனில் அப்போதிருந்த பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க வாலிண்டியர் படையும் சிறியவை யாயினும் பலமுள்ளவை. அவை நெடு நாட்கள் வரை ஜப்பானியர்களுக்குப் போர் கொடுத்துக் கொண்டிருந்தன. ஜப்பானியர்கள் தலைகாட்டிய போதெல்லாம் அவர்களை விரட்டியடித்து வெகு தூரத்திலேயே வைத்துக் கொண்டிருந்தன.

1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 23-ம் தேதி செவ்வாய்க்கிழமை ஒரு முக்கியமான நாள். நான் ஆற்றைக் கடந்து அக்கரை போகும்பொருட்டு பார் தெரு துறைமுகத்தில் என் படகுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். கப்பல்களுக்குத் தேவையான சாமான்களை சப்ளை செய்வது என் தொழில். ஆகவே நான் துறைமுகத்திற்கு அடிக்கடி போவேன். ஏராள மான தொழிலாளர்கள் இந்தியர்களும் பர்மியர்களும் என்னிடம் வேலை செய்துகொண்டிருந்தனர். காலை மணி 10 இருக்கும். சூரியன் தன் கதிர்களை வீசிக்கொண்டு உயரக் கிளம்பிக்கொண்டிருந்தான். ஒரு விசித்திரமான சத்தங் கேட்டது. ஆகாயத்திலிருந்து வந்த அந்த ஒலி வெகு தெளிவாகக் கேட்டது. நான் உயரப் பார்த்தேன். முதலில் என் கண்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சில விநாடிகளே கழிந்தன. ஏதோ ஒரு புள்ளி தெரிந் தது. அது வரவர அருகில் வந்துகொண்டிருந்தது. அதன் வேகம் வெகு அதிகம். அது ஒரு எதிரி விமானக் கோஷ்டி. அவை மேல் திசையிலிருந்து வந்துகொண் டிருந்தன. எனக் கருகிலிருந்தவர்களும் அதைப் பார்த் தார்கள். அப்போது துறைமுகக் கமிஷனர் ஆபீசு கோ புரத்தினின்று அபாயச் சங்கு ஒலித்தது. அருகிருந்த வர்களை உடனே ஓடிப்போய் பதுங்கிக் கொள்ளும்படி கூறினேன். என் காரியாலயத்திற்கு விரைந்து போக விரும்பினேன். எனவே, என் மோட்டார்காருக்கு விரைந் தோடினேன். ஐந்து நிமிஷங்களில் நான் அங்கே போய்ச் சேர்ந்து விடலாம். அது 49-வது வீதியிலிருக்கிறது. அங்கே நான் பாதுகாப்போ டிருக்கக்கூடு மென்று நினைத் தேன். விமானங்களின் சத்தம் வெகு சமீபத்திலே கேட் டது. ஒரு பெரும் சத்தம். அதை யடுத்து ஒரு பெரிய வெடி சத்தம். என் காரியாலயத்தி லிருந்த கண்ணாடிக் கதவுகளில் ஏறக்குறைய எல்லாம் நொறுங்கின. நான் சிக்கிக் கொண்டதாகத் தான் நினைத்தேன். சற்று தைரி யங் கொண்டு மெத்தைப்படிகளை இறங்கி வந்தேன். டல ஹௌசி தெருவிற்கு அப்பால் எனது இடதுபுரத்தில் ஒரு முதலுதவி நிலையம் இருந்தது. வலதுபுரத்தில் செண்ட் பிலிப்ஸ் கோவி லிருந்தது. இவ்விரண்டிடங்களில் எது அதிகப் பாதுகாப்புள்ளது? ஆபத்தான கட்டத்தில் சிக்கலானதோர் பிரச்சினை. என்னையும் அறியாமலேயே என் கால்கள் என்னை அக்கோவிலுக்கு இழுத்துக்கொண்டு போயின. நான் ஒரு இந்து, கிருஸ்துவனல்ல. என்றாலும் அதுவும் கடவுள் சித்தம் என்றுதான் கருதினேன். ஏனென்றால், நான் மறுபுரம் போயிருந்தால், இன்று நான் இங்கிருந்து பேசிக்கொண்டிருக்க முடியாது. அந் தக் கோவில் காம்பவுண்டுக்குள் அந்தக் கோவில் பாதிரி யார் ஒரு பள்ளம் வெட்டியிருந்தார். அவருடைய குடும் பத்தாரும், மற்றும் சிலரும் அங்கே முன்னேயே பதுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களோடு நானும் போய்ச் சேர்ந்துகொண்டேன்.

அடுத்தடுத்து வெடிகுண்டுகள் வெடிக்கும் சத்தத்தைக் கேட்டேன். அந்தக் காம்பவுண்டி லுள்ள பள்ளிக்கூடத் தின்மேல் ஒரு வெடிகுண்டு விழுந்தது. உடனே, அங்கே தீப்பற்றிக் கொண்டது. மகா கொடூரமாக எரிந்தது. நாங் கள் இருந்த இடத்திற்கு அது வெகு சமீபம். ஆகவே நாங்கள் ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டோம். புகை வெகுவாகச் சூழ்ந்தது. பள்ளத்திலிருந்த எங்களை அது வெகு இலகுவில் சூழ்ந்திருக்கும். ஆனால் எங்களுக்கும் அதற்கும் இடையே பெரிய கற்கட்டடமான கோவில் இருந் தது. நல்ல வேளையாக, காற்று வீசி புகையை வலது புரம் கொண்டு சென்றது. என் எண்ணமெல்லாம் என் குடும்பத்தார் மேல்தான் இருந்தது. சில நாட் களுக்கு முன்புதான் அவர்களை 6 மைல்களுக்கு அப்பா லிருந்த திங்குஞ்சானுக்கு அழைத்துக் கொண்டு போயிருந் தேன்.

**விமானத் தாக்குதல்களின் பலி.**

அரைமணி நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டங்க ளெல்லாம் ஓய்ந்தன. பள்ளத்தை விட்டு மெதுவாக வெளியேறினேன். தெருக்களில் மனித நடமாட்டமில்லை. தெருக்களில் கோணலும் மாணலுமாக தந்தி மரங்களும் தந்திகளும் அலங்கோலமாகக் கிடந்தன. மின்சார ஸ்தாபனம் நிலை குலைந்திருந்திருந்ததுபோலத் தோன்றியது. இங்கும் அங்கும் சில இன்றியமையாத ஊழியர்கள் காணப்பட்ட னர். இந்தச் சம்பவம் நேரும்போது தொழிலாளர்களும், அங்காடிக் கடைக்காரர்களும் ரிக்ஷாக்காரர்களும் திடீ ரென்று வெடிகுண்டுகளுக்கு இரையானார்கள். மற்றவர் களை ஜப்பானிய விமானங்கள் நெருங்கி வந்து மிஷின் பீரங்கிகளால் சுட்டுத் தள்ளின. ஆசியாவை விடுவிப்பதாகக் கூறுகின்றவர்கள் செயல் இது. 'டோலி' களில் தூக்கிக் கொண்டு போகப்பட்டவர்களின் நிலைமை மகா பயங்கரமா யிருந்தது. கைகால் இழந்தவர்களின் காட்சியும், இரத் தம் பீரிட்டடிக்கும் காட்சியும் மகா கோரமாயிருந்தன. இவர்களை அருகிலிருந்த முதலுதவி நிலையத்திற்கு எடுத் துக்கொண்டு போயினர். கொடுமைக்கார ஜப்பானியர்கள் இவர்களை, இந்த ஏழை மக்களை, ஏன் தாக்கவேண்டு மென்று எனக்குப் புரியவில்லை.

இதுதான் பர்மாவை அவர்கள் முதன்முதல் தாக்கியது என்பதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். விஷயமறியாதவர்களுக்கு அது வேடிக்கையாகத் தோன்றி யது. அவர்கள் தம் ஜன்னலின் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார்கள். அவர்களையும் ஜப்பானியர்கள் சுட் டுக் கொன்றார்கள். இதனால் பெரும் சேதம் ஏற்பட்டது.

தன்னலமில்லாமல் அருந் தொண்டாற்றிய அங்கு வைத் தியர்களுக்கும் அவர்களுக்கு உதவியாயிருந்தவர்களுக்கும் நன்றி கூறவேண்டியது அவசியம். அது போலவே தொண்டர் படையினருக்கும் ஏ.ஆர்.பி. காரர்களுக்கும் நன்றி கூறவேண்டும்.

ஜப்பானிய விமானங்களின் எண்ணிக்கை வெகு அதிக மாயிருந்துங் கூட, அவற்றில் சிலவற்றைச் சுட்டு வீழ்த்திய பெருமை கொஞ்ச எண்ணிக்கையுள்ள பிரிட்டிஷ் விமானப் படைக்கும் அமெரிக்க வாலின்டியர் படைக்கும் உரியது. 1941-ம் டிசம்பர் 25 நடுப்பகல் வேளையில் தஞ்சாங்கூனில் நான் இருந்தேன். அப்போது அபாயச் சங்கொலி கேட்டது. என் பங்களோ காம்பவுண்டில் நான் கட்டியிருந்த பள்ளத்திற்குள் என் குடும்பத்தாரோடு போய் பதுங்கிக் கொண்டேன். தஞ்சாங்கூனில் ஒன்றும் நடை பெறவில்லை. ஆனால் மேற்கு ரங்கூன் பகுதியில் ஜப் பானிய விமானங்கள் தம் வேலையை நடத்திக் கொண் டிருந்தன. அவற்றை நான் கேட்கத் தான் முடிந்தது. விமான எதிர்ப்பு பீரங்கிகளும் ஒலித்துக் கொண்டுதானிருந் தன. பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க வாலின் டியர் படையினரும் கிளம்பி பெரும் சேதத்தோடு ஜப் பானிய விமானங்களை விரட்டினார்கள். என்றாலும் ஜப் பானியர்கள் அங்கே சில வெடிகுண்டுகளை எறிந்து விட்டுத் தான் போனார்கள். பெண்கள் டப்ரின் ஆஸ்பத்திரியும் அன்று தாக்கப்பட்டது. மற்றும் பல கட்டடங்களும் தாக் கப்பட்டன. முந்திய அனுபவம் உள்ளவர்கள், காலா காலத்தில் பதுங்கிக் கொண்டார்கள்.

1942-ம் ஜனவரி இரவும் பகலும் அடுத்தடுத்து ரங்கூனைத் தாக்கினார்கள். ஒருநாள் நடு இரவில் சங் கொலி கேட்டோம். உடனே பள்ளத்தில் பதுங்கிக் கொண்டோம். பல விமானங்களின் சத்தத்தையும் மிஷின் பீரங்கிகளின் சத்தத்தையும் கேட்டோம். இருட் டில் திடீரென்று பேரொளி வீசியது. ஒரு பெரிய ஜப் பானிய வெடிகுண்டு விமானம் விழுந்ததனால்தான் அந்தப் பேரொளி வீசியது. அப்போது வெடிகுண்டு எங் கள் தலையில் தான் விழுகிறதோ என்று நடுங்கிக் கொண் டிருந்தோம். நாங்கள் இருந்த இடத்திற்கு சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்த நெல் வயலில்தான் அது விழுந்தது.

யுத்த ஆரம்ப காலத்தில் ஏ.ஆர்.பி. யில் நானும் சேர்ந்து தொண்டாற்றுவதாக எழுதிக் கொண்டேன். ரங் கூன் டவுன் டிஸ்ட்ரிக்டின் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் நான் இருந்தேன். அப்பொழுது இராணுவச் சட்டம் அமுலுக்கு வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. அதை நடத்தும் பொருட்டு என்னை 'எமெர்ஜென்சி ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்'டாக நியமித்தார்கள். ஆனால், அங்கே இரா ணுவச் சட்டம் அமுலுக்கு வரவில்லையாகையால், இந்தப் பதவியை நான் வகிக்கவில்லை.

என் குடும்பத்தாரை சென்னைக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டு மென்று முடிவு செய்தேன். ஆகவே ரங் கூன் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் இரண்டு வாரம் விடுமுறை பெற்றுக்கொண்டு 1942-ம் பிப்ரவரி 3 கிளம்பி னோம். பர்மா அத்லெடிக் அசோஸியேஷன் பஸ் ஸ்டாண் டில் ஏராளமான ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு நாங்களும் வந்து சேர்ந்தோம். துறை முகத்திற்கு ஜனங்களை ஏற்றிக் கொண்டு போக, ஸ்பெஷல் லாரிகள் ஓடிக்கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் சங் கொலி கேட்டது. உடனே அங்கிருந்த பள்ளங்களில் பதுங்கிக் கொண்டோம். பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க வாலின்டியர் படையும் விரைந்து வந்தன. ஜப்பானிய விமானங்களும் விரைவாக வந்து எதிர்க்கவே ஜப்பானிய விமானங்கள் மறைந்துவிட்டன. இதனால், நாங்கள் துறைமுகத்திற்குப் போய் கப்பலேற முடிந்தது. பிப்ரவரி 7 நாங்கள் கல்கத்தா வந்து சேர்ந்தோம்.

வழியில் பலவகைக் கஷ்டங்களுக்கு நாங்கள் உள்ளா னோம். கல்கத்தாவில் ரயிலேறி சென்னை வந்து சேர்ந் தோம். இதற்கிடையில் பர்மாவிற்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு அறவே அற்றுவிட்டது. ஆகவே, நான்

(11-ம் பக்கம் பார்க்க)

# மடசாம்பிராணி யார் ?

'மடப்பய மகனே!' என்று ஒருவன் தன் சொந்தப் பிள்ளையையே வைதால் எவ்வளவு தமாஷாக இருக்குமோ, அதேமாதிரி தான் ஹிட்லர் போனவாரம் பேசினதும் தமாஷாகவே இருந்தது. தன்னையும் மறந்து பேசியிருக்கிறார் அவர் பாவம்!

"சோவியத் ருஷ்யாவின் ராணுவசக்தி, பிரம்ம ராக்ஷஸின் சக்தியை நிகர்த்தது. இத்தகைய மகாசக்தி வாய்ந்த ஒரு தேசத்தோடு போர்புரிந்து ஜெயம் பெறலாம் என லேசாக நினைப்பவர்கள் சரியான மடசாம்பிராணிகளாகத் தானிருக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார் அவர்.

இது ஆயிரத்தில் ஒரு உண்மையான பேச்சு, இந்தச் சமயத்திலே, இரண்டரை வருடங்களுக்கு முன் இதே சூரர் சொன்ன வார்த்தைகளை உலகோர் மறந்திருக்கமாட்டார்கள்.

'ஜெர்மனியின் ராணுவ சக்தியை எந்தத் தேசமும் எதிர்த்து நிற்க முடியாது. ஜெர்மனிக்குள் எந்த எதிரியும் எட்டிப் பார்க்க முடியாது. ஜெர்மானிய வீரர்கள் வணங்கா முடியர்கள் போல அவர்கள் சுத்த வீரர்கள். முன் வைத்த காலை பின்வைக்க மாட்டார்கள். புயலென பாய்வார்கள். தங்களை எதிர்ப்பவர்களை, அவர்கள் ஆடிக்காற்றிலகப்பட்ட பஞ்செனப் பறக்கடிப்பார்கள். இந்த ருஷ்யா எங்களுக்கு முன் எம்மாத்திரம்? எங்களது அபார சக்தியைக் கொண்டு, பத்தே வாரங்களில் ருஷ்யாவைத் தாக்கி, அடிக்கப் போகிறோம். அப்புறம் சோஷலிஸம், கம்யூனிஸம், என்பதெல்லாம் மாயமாக மறைந்துவிடும் என்று கூறினார் ஹிட்லர்.

வெறும் குடியானவர்கள் நிறைந்த நாடு தானே அது என்று வெகு கேவலமாக எண்ணினார் அவர் ருஷ்யாவைக்குறித்து. லக்ஷக்கணக்கான ஜெர்மானிய வாலிபர்களை ருஷ்யாவிற்கு அனுப்பினார். ஆரம்பத்தில் கிடைத்த வெற்றிகளைக் கண்டு, மெய்மறந்து போனார். யூக்ரேனிலே குடியேறி வாழவும், நாஸித் தொழிற்சாலைகளைக் கட்டவும் பெரிய திட்டங்கள் போட்டார். ஆனால் என்ன ஆச்சு? 'ஹிட்லர் பெரிய மடசாம்பிராணி', ருஷ்யாவைக் குறித்து சரியான மதிப்புப் போடத் தெரியாது மடத்தனமாக நடந்துகொண்டு, கோடிக்கணக்கில் ஜெர்மன் உயிர்களையும், ஆயுதங்களையும் பாழாக்கி விட்டார். அவராலேயே, சும்மா யிருந்த ஜெர்மனி, சுடுகாடாகப் போகப் போகிறது என்பதெல்லாம் வெட்டவெளிச்சமாச்சு! தான் மடசாம்பிராணியானதை உணராது, பிறருக்கு உபதேசம் செய்ய வந்து விட்ட ஹிட்லரைப் பார்க்கும் பொழுது, அழுவதா, சிரிப்பதா தெரியவில்லை.

ஐயோ மனுஷா! பேசாது பெயிண்ட் அடித்துக் கொண்டே, அந்த உத்தியோகத்திலேயே இருந்திருக்கப் படாதா? உன்னை யாரையா சண்டைக்குக் கிளம்பச் சொன்னார்கள்? அர்த்தமற்ற பதவி மோகத்தால் அண்டத்தையே அழுத கண்ணும், சிந்திய மூக்குமாக இருக்கச் செய்து விட்டாயே! உன்னாலே எத்தனை பெண்கள் அமங்கலியராகி அழுது சாப்பிடுகிறார்கள்! எத்தனைத் தாய்மார் தம் அருமைச் செல்வர்களைப் பறி கொடுத்துவிட்டு, அழுது துடிக்கிறார்கள்! எத்தனைக் குழந்தைகள் அனாதைகளாகியிருக்கிறார்கள்! எத்தனைக் குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்க நேரிட்டிருக்கிறது! என்பதெல்லாம் உனக்குத் தெரியுமா ஐயா!

ஒரு டன் ஒன்பது ரூபாய்க்குக் கிடைத்துக்கொண்டிருந்த சவுக்கு விறகு, நாற்பது ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காமல் குதிரைக் கொம்பாகி, அரிசியும் பருப்பும், எண்ணெயும் ஆனை விலை குதிரை விலையாகி, அனைவரும் தவித்துக் கொண்டே இந்நாட்டிலே அனுதினமும் உம்மை வாயாற வைது தீர்க்கிறார்கள் என்பது உமக்குத் தெரியுமா? 'உன்னாலே யல்லவோ உலகம் பாழாகுது ஹிட்லர் மடையா!' என்று சொல்லலாம் போல் தோன்றுகிறது.

ஹிட்லர் இப்பொழுது 1939, 1940-க்கு முன் இருந்த ஹிட்லராக இல்லை. இப்பொழுது அவரைப் பார்த்தால் கூட, பிசாசு போலத் தான் மாறி யிருப்பார். கவலைப் பேய் அவரைப் பிடுங்கித் தின்ன வண்ண மிருக்குமே! எங்கு போனாலும் நிம்மதி கிடைக்குமா அவருக்கு? அவரைக் கொண்டு போய் கல்லறையில், ஆழத்தில் வைத்த பின் தான், அவருக்கு அமைதி ஏற்படும். அவராக இழுத்து விட்டுக் கொண்ட உபத்திரவம் இது. இனி அவராக அமைதியை விரும்பினாலும், அதைப் பெற முடியாது அவரால். அந்தச் சரக்கு நேச தேசத்தார் கைக்கு மாறி விட்டது. அதனை நேசதேசத்தார் அனேகமாக அவருக்குக் கொடுக்க மாட்டார்கள் என்று கூடச் சொல்லி விடலாம்.

ஒரு புறம் ருஷ்யர்கள் போடுகிற போடைக் கண்டு உலகமே பிரமிக்கிறது. லெனின்கிராட் நகர் அருகே எழுந்த படையெடுப்பு வெற்றிமேல் வெற்றியாக ருஷ்யர்களுக்குச் சம்பாதித்துக் கொடுத்த வண்ணமாக இருக்கிறது. லெனின் கிராட் நகரம் சுதந்திரம் பெற்றுவிட்டது. ஜெர்மன் பீரங்கிகள் இனி அந்நகரைச் சுட முடியாது. அந் நகரைச் சுட்டுக் கொண்டிருந்த பீரங்கிகள் நாட்டப் பட்டிருந்த நகரத்திலிருந்து நாஸிகளை செஞ்சேனை வீரர்கள் துரத்தியடித்து விட்டார்கள்.

யுத்தம் முடிந்ததும், இந்த யுத்தத்தைப் பற்றி பல பிரபலஸ்தர்கள் புஸ்தகங்கள் எழுதுவார்கள் என்பது நிச்சயம். அப்பொழுது ஸ்டாலின்கிராட், லெனின்கிராடு ஆகிய இரு நகரங்களின் பெயர்களும், வார்ஸா, மால்டா தீவு, டோப்ருக் துறைமுகம் ஆகிய பெயர்களோடு சேர்க்கப்படுமென்பது திண்ணம்.

லெனின்கிராடு என்ற பெயர் லெனினின் ஞாபகார்த்தமாகவும், ஸ்டானின்கிராடு என்ற பெயர் இணையற்ற ருஷ்யத் தலைவரான ஸ்டாலினுடைய ஞாபகார்த்தமாகவும் வைக்கப்பட்ட பெயர்களாகும், இந்த இரு பெரியார்களுடைய பெயருக்கும், பெருமைக்கும் களங்கம் வராது உறுதியுடனிருந்து, விரோதிகளுக்கு புத்தி புகட்டிய திடசாலிகளின் பெயர்களைப் பொன்னெழுத்துக்களால் எழுத வேண்டும்.

லெனின்கிராடு நகரம் நாஸிப் பிடியிலிருந்து விடுபட்டுவிட்டது. அதை விடுவித்த செஞ்சேனை வீரர்கள் மளமளவென தெற்கிலும், மேற்கிலும் பாய்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். லூகா என்ற நதியை பெரு சிரமத்துடன் இவர்கள் கடந்துவிட்டார்கள். அடுத்தாப்போல் உள்ள எஸ்டோனியா என்ற நாட்டு எல்லையிலிருந்த கிங்கிஸெப் என்ற முக்யமான நகரையும் போராடிப் பிடித்து விட்டார்கள். ஜெர்மானியர் எல்லா இடங்களிலும் பயங்கரமாகத் தான் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பலன் பூஜ்யம் தான்.

**ஒரு கஜத்திற்கு 2 பீரங்கி.**

ருஷ்யப் பீரங்கிப்படை இன்று எத்தகைய சக்தியோடு இருக்கிறது தெரியுமா? வெர்டன் எனுமிடத்திலே, போன மகா யுத்தத்திலே பிரஞ்சுக்காரர்கள் 1,080 கஜத்திற்கு 190 பீரங்கிகள் வீதம் வைத்திருந்தார்களாம். ஆனால் ருஷ்யர்களோ இப்பொழுது அதே ஒவ்வொரு 1,080 கஜத்திற்கும் சுமார் 2,000 பீரங்கிகள் வைத்திருக்கிறார்களாம். அதாவது ஒரு கஜத்திற்குள் இரண்டு பீரங்கிக ளிருக்கின்றனவாம். அய்யொடா! அது தான் ஜெர்மானியர்கள் இப்படி மான்கள் போல மாயமாக, பின்னாலே பறந்தோடுகிறார்கள். இப்பொழுதல்லவா தெரிகிறது ரகசியம்!

ருஷ்யக் கப்பற்படை இப்பொழுது தைரியமாக வட கடல் பிரதேசத்தில் கிளம்பி, ஜெர்மனிக்கும் பின்லாந்திற்கும் உள்ள தொடர்பை அறுக்க முயலும் வேலையை ஆரம்பித்து விட்டதாம். இன்னொரு செஞ்சேனை லட்வியா எனும் தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

அநேக இடங்களில் ஜெர்மானியர் பின் வாங்கி ஓடக் கூட முடியாதபடி ஆகிவிட்டது. ஜெர்மானியர் கற்றுக் கொடுத்த இடுக்கித் தாக்குதலை ருஷ்யர்கள் நன்றாகக் கற்றுக்கொண்டு, ஜெர்மானியரைத் திணற அடிக்கிறார்கள்.

தெற்கே கெர்ச் தீபகற்பத்திலும் ருஷ்யப் படைகள் வந்திறங்கி, மும்முரமாகப் போராடுவதாகத் தெரிகிறது. தென்திசையைவிட வடதிசையில்தான் போர் பயங்கரமாக இருக்கிறது. ஐயோ! வடக்கே இப்படித் தாக்குகிறார்களே என்று நாஸிகள் வடக்கே ஓடினால், தெற்கே ஆரம்பித்து விடுகிறது ஒரு பெரிய போர். இரண்டரை வருடகாலமாக இடைவிடாது எத்தனையோ கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு, இப்பொழுது தங்களது பொருளாதார நிலைமையையும் ராணுவ சக்தியையும் ரொம்ப உயர்த்திக் கொண்டிருக்கிறார்களாம் ருஷ்யர்கள். 'நில்' என்றால்கூட நிற்கமாட்டார்கள் போலிருக்கிறது ருஷ்ய வீரர்கள். அவர்களுடன் போலந்தின் மக்களாக உள்ள வீரர்கள் பலர், தங்கள் தாய் நாட்டிற்கு நாஸிகள் இழைத்த தீங்குகளுக்குப் பழிக்குப் பழி வாங்கப் பதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது இப்படி யிருக்க, மேற்றிசையில், இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கான யத்தனங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன. வெட்டுக்கிளிகள் போல் நூறு லக்ஷத்திற்கு மேற்பட்ட வீரர்கள் ஐரோப்பா மீது போய் பாயப்போகிறார்கள். ஹிட்லர் பூண்டே எங்கு மில்லாதபடி துடைத்து முடிக்கப்போகிறார்கள்.

"வினை விதைத்தவன் வினை அறுப்பான்", தீமைவிளைத்தவன் தீமையேதான் பெறுவான். இந்த உண்மை ஹிட்லருக்கு இப்பொழுது தான் ஞானோதயமாவது போல் தெரிந்து வருகிறாப்போ லிருக்கிறது.

ஹிட்லர் பட்டத்துக்கு வந்து பதினோரு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இந்த வருஷாப்தீகத்தைக் கொண்டாடும் வகையில், ஹிட்லர் தமது தலைமை ஸ்தானத்திலிருந்து அது எந்த மரத்தடியோ, எந்த மோட்டாரோ, எந்த மலை உச்சியோ, எந்தக் குகையோ யார் கண்டார்கள், ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அந்தப் பிரசங்கத்தை வாசித்தால், அவருக்கு ஏற்பட்டுள்ள தொடை நடுக்கம் நன்றாகத் தெரிகிறது.

'ஜெர்மனி ஒன்றே இந்த யுத்தத்தில் ஜெயிக்கும்' என்று அவர் தமுக்கடித்த காலமெல்லாம் போய்விட்டது. 'யுத்தத்தின் முடிவு எதானாலும் சரி, இங்கிலாந்திற்கு ஐரோப்பாவில் உள்ள அந்தஸ்து போய்விட்டது' என்கிறார் அவர். இங்கிலாந்து என்றாலே அவருக்கு எட்டிக்காய் மாதிரி எந்நாளும். வேறு யாருக்கு வேண்டுமானாலும் மதிப்புக் கொடுப்பார். இங்கிலாந்து உண்மையிலேயே மதிப்புக்குப் பாத்திரமாக வேண்டி யிருந்தாலும், அப்பொழுதும் இதை இகழத் தான் செய்வாரவர். ஏனென்றால் இங்கிலாந்தை எளிதில் சட்ணியாக்கி விடலாமென்றெண்ணிக் கொண்டிருந்தவரவர். அது சாத்யமாகவில்லை. அதற்குமாறாக, இன்று அதே இங்கிலாந்திலிருந்து இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவரது வாலை ஒட்ட அறுக்க இங்கிலாந்து கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே இங்கிலாந்து என்றால் எரியுமா இல்லையா அவருக்கு ?

'இந்த யுத்தத்திலே, ஜெயித்தால் ஜெர்மனி ஜெயிக்க வேணும். இல்லாவிட்டால் ருஷ்யா ஜெயிக்கும். ருஷ்யா ஜெயித்தால் பிறகு அமெரிக்கா, பிரிட்டன் பாடு ஆபத்துத்தான். சோவியத் ஆசாமிகள் ஜெர்மனியை ஜெயித்து விட்டால், அதோடு திருப்தி யடைந்து விடுவார்கள் என்றெண்ணுவது தவறு. பிரிட்டிஷார் தங்களை தங்கள் நாட்டிலிருந்துகொண்டே, போல்ஷவிஸப் படையெடுப்பிலிருந்து பாது காத்துக் கொள்ள வேண்டி வரும். பிரிட்டன் தன்னைத் தானே காத்துக்கொள்ளும் சக்தியற்றது. இந்த யுத்தத்திற்கே யூதர்கள் தான் காரணம். இந்த யுத்தம் சகல நாடுகளின் கண்களையும் திறக்கச் செய்து, யூதர் பிரச்னைகளை அப்பட்டமாக எடுத்துக் காட்டும்' என்ற தினுஸில் பேசியிருக்கிறார் ஹிட்லர்.

ப்பு ! பழைய பல்லவி தானா கிடைத்தது சூரப் புலி ஹிட்லருக்கு ! நேசதேசத்தாரிடை பிளவு ஏற்படுத்தப் பார்க்கிறார் அவர். ருஷ்யாவிற்கும், இதர நேசதேசங்களுக்கு மிடையில் பூசல் கிளம்ப வேண்டு மென்று விரும்புகிறார் அவர். இது அவர் பல வருஷங்களாக அநுசரித்து வரும் பழைய முறை ஆயிற்றே ! இதனால் அவர் பலனைதயும் காணப்போவதில்லை. அவரது மூளை வேலை செய்யவில்லை புது மாதிரியாக என்பது நன்றாகத் தெரிகிறது. சாகப் போகிறவன் வைக்கோல் ஜலத்திலே மிதந்து வருவது கண்டு, கெட்டியாகப் பற்றிக் கொள்வது போல், உபயோகமற்ற தொரு பிரசாரத்தை இப்பொழுது ஒரு கருவியாக எண்ணி உபயோகப்படுத்தப் பார்க்கும் ஹிட்லர், மட சாம்பிராணி என்று நினைக்கிறீர்களா இல்லையா ?

இனி ஜெயம் என்பதையே நினைக்கப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டே தான் அவர் பேசியிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. சும்மாவாவது தமது நாட்டு மக்களுக்குக் குஷிப் படுத்த முயன்றிருக்கிறார். கட்டிய மனைவியும் போய், கைக் குழந்தையும் காலனுக்கு இரையாகி, காராம் பசுவும் மடிந்து, கன்றுக்குட்டியும் செத்து, கடன்காரனும் அமீனாவோடு வந்து சப்திக்கு நிற்கும் பொழுது, ஒருவனைப் பார்த்து 'சிரி' என்றால் சிரிப்பு வருமா ? ஹிட்லர் தனது நாட்டு மக்களுக்கு உத்சாக மூட்ட முயலுவது இதே போல் தானிருக்கிறது.

அவர் சொல்கிறார், 'ஜெர்மன் தேசத்தில் வசிக்கும் மக்களுக்கு, தங்களுடைய தலைவிதி எத்தகையது என்பது தெரியும். போர்முனையில் உள்ள தங்கள் மக்களின் தலைவிதியும் என்னாகும் என்பது தெரியும்' என்று.

யார் தெரியாது என்றது ? மேலேயிருந்து ஒரு வாரத்திற்குள் மூவாயிரம் டன் குண்டுகள் விழுகின்றன. பெர்லின் நகரத்தில் எரியும் தீ நூறு மைல்களுக் கப்பால் போன பின்பும், நேசதேச விமானிகளுக்குத் தெரிகிறது. ஆயிரக் கணக்கில் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானிகள் பயமில்லாது பட்டப் பகலில் தோன்றி, ஜெர்மன் சண்டை விமானங்களையே விட்டில் பூச்சிகளைப் போல் விழ அடிக்கிறார்கள். ஜப்பானிற்குப் போகும் கப்பல்களும், வரும் கப்பல்களும் 'க்ளோஸ்' செய்யப்படுகின்றன. வெளி நாடுகளிலிருந்து லக்ஷக்கணக்கில் தொழிலாளர்கள் வந்து விட்டதால், உணவுப் பொருள்களுக்கு ஏகப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி யிருக்கிறபோது, ஜெர்மன் மக்களுக்கு தங்கள் தலைவிதியைப் பற்றித் தெரியாது என்று சொல்ல முடியுமா ?

போர்முனைக்குப் போன ஜெர்மன் மக்களின் தலைவிதி தான் ரொம்ப நன்றாகத் தெரிந்திருக்கிறதே. அவர்களில் பெரும்பாலோர் ஊர் திரும்ப மாட்டார்கள் என்று இதைத் தான் ஹிட்லர் மனசில் எண்ணிப் பேசியிருக்க வேண்டும். ஆனால் கடைசியிலே ஜெர்மன் மக்களின் திட மனசைப் பற்றிக் கொஞ்சம் புகழ்ந்து விட்டார்.

இதே ஜெர்மனியி லிருந்து தான், பல லக்ஷக் கணக்கானவர்கள் மேற்குப் போலந்திற்கு இடம் மாறிக் கொண்டிருக்கிறார்களாம். அசல் ஜெர்மனியில் ஆபத்தில்லாத இடமே இல்லையாம். தென் பிரான்ஸிலும், மற்ற கடற்கரைப் பிரதேசங்களிலும் உள்ளவர்கள் கூட்டம் கூட்டமாக உள் நாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்களாம் படையெடுப்பு பீதியோடு.

ஸ்பெயின் தேசத்திலும் புகைச்சல் கிளம்பியிருக்கிறது. தமது விளக்கெண்ணெய் வியாபாரத்தை ஜெனரல் பிராங்கோ அங்கு வெகுநாட்கள் நீடித்து நடத்த முடியாது என்றே படுகிறது. அவர் அதிகாரத்தி லிருப்பதே ஸ்பெயினுக்கு ஆபத்து என்ற அபிப்பிராயம் வலுத்துக் கொண்டிருக்கிறது. தவிர, நேசதேசத்தவர்கள் மத்ய தரைக் கடல் பிரதேசத்தி லிருந்தும், அட்லாண்டிக் மகா சமுத்திரக் கரை, இங்கிலீஷ் கால்வாய் பிரதேசங்களிலிருந்தும் படையெடுக்கையில், ஸ்பெயினிலே ஜெர்மானியர் தங்கி சேஷ்டைகள் செய்வதை யாராவது விரும்புவார்களா ?

ஆகவே, அச்சுநாட்டருடன் உங்களுக்குள்ள உறவை அறுத்துக் கொள்ளுகிறீர்களா, இல்லாவிட்டால், நாங்கள் உங்களோடு 'டூ' போடட்டுமா என்று நேசதேசங்கள் ஸ்பெயினை நெருக்கிக் கேட்டுக் கொண்டிருக்கின்றனவாம். ஸ்பெயின் ஏதாவது ஒரு தினுஸாக முடிவு கூறியே ஆக வேண்டும். நேசதேசத்தாருடன் சேரும் புத்திசாலித் தனமான மார்க்கத்திலேயே அது செல்லும் போலிருக்கிறது. இதோடு, தென்னமெரிக்காவில் கொட்டம்போட ஜெர்மானியருக்கு உபயோகமாக இருந்த ஆர்ஜென்டினா தேசமும் அச்சு நாடுகளுடன் போர் தொடுத்து விட்டது. இன்னும் கொஞ்ச காலம் கழிந்தால், நேசதேசத்தார்களின் அளவு கடந்த சக்தியையும், அவர்களடைந்து வரும் வெற்றிகளையும் கண்டு, அச்சுநாடுகளுக்கு விரோதமாக ஆகாத நாடே இராது என்று நினைக்கிறோம். எங்கு திரும்பினாலும் எதிரி இடிக்க வருகிறான் என்றால், ஹிட்லர் மட்டுமல்ல, அவருடைய தாத்தா சிங்கமானாலும் அலறத்தான் வேண்டும். கூடிய சீக்கிரமே ஐரோப்பாவில் அதி மகத்தான போர்கள் சில நடக்கப்போகின்றன. அவற்றைக் கவனிப்போம்.

இப்போதைக்கு, இத்தாலி மீதும், கிழக்கே ஜப்பானியர் மீதும் உலகோரின் திருஷ்டி விழுந்து கொண்டிருக்கிறது.

இத்தாலியிலே, நேசதேசப் படைகளில் ஐந்தாவது சேனை, மேல் கரையிலே நாஸிப் படைகளுக்குப் பின்னணியில் ரோமாபுரிக்கு இன்னும் அருகே போய் இறங்கி முன்னேற முயன்று கொண்டிருக்கிற தல்லவா ? அந்தச் சேனையை எதிர்க்க, ஜெர்மானியர் கஜகர்ணம் போடுகிறார்கள். பலமான சேதமாம். அதோடு நேசதேசப் படைகளை அசைக்க முடிய வில்லையாம் அவர்களால். மழையும், புயலும் நேசதேசக் கப்பல்கள் அதிகப்படியான ஆட்களையும், ஆயுதங்களையும் இறக்குவதற்கு இடைஞ்சலாக இருக்கின்றனவாம். ஆனாலும், ஜெர்மானியர் அயர்ந்திருக்கும்போதே, நிறைய ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டு இறக்கிக் கொண்டு விட்டதால், நேசதேசத்தார்கள் நாஸிகளின் டாங்கிப் படையெடுப்பையும் சமாளிக்க முடிகின்றது.

ரோமாபுரிக்குத் தெற்கே நாஸிப் படைகள் பலமான பாதுகாப்புக்களோடு, நேசதேசப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்று கொண்டிருக்கின்றன. ரோமா

(10-பக்கம் பார்க்க.)

அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த நாராணகஞ் ஏழைகள் மீட்சி விடுதிக்கு மேன்மை தங்கிய வைசிராய் பிரபுவும் அவருடைய மனைவியாரும் விஜயம் செய்து அனைத்தையும் நேரில் பார்வையிட்டார்கள்.



# "மொபைல் கான்டீன்"

## ஸ்ரீமதி ஜெயம்மா அனந்தாச்சாரி.

ஒரு நாள் நாங்கள் ஐந்து, ஆறு பேர் கூடி பேசிக் கொண்டிருக்கையில் எங்களில் ஒருத்தி, நீங்கள் இந்த மாதிரி வீண் வம்பு பேசி காலம் கழிப்பதை விட, ஏன் ஏதாவது உபயோகமான காரியங்கள் செய்யக் கூடாது என்றாள். அவள் சொன்னது தான் தாமதம். எல்லோருமாய்ச் சேர்ந்து அவளை, நீ ரொம்பவும் பரோபகாரி என்பது எங்களுக்குத் தெரியும். எங்களால் என்ன செய்ய முடியும் என்பதை நீ தான் சொல்லேன் என்றோம். அதற்கு அவள் என்னால் சொல்லுவதற்கு முடியாது. என்னுடன் ஒரு நாளைக்கு வந்தால், நீங்கள் பார்க்கலாம். அதற்கு மேல் உங்களுக்கே தோன்றும் என்றாள். அதற்கு நாங்கள் எங்கே என்றும் எதற்கு என்றும் சொல்லாமல் என்னுடன் வா என்றால் யார் தான் வருவார்கள் என்றோம். அதற்கு மேல், அவள் நம்முடைய இந்திய துருப்புக்களுக்காக நாங்கள் என்ன என்ன செய்கிறோம் என்று என்னுடன் வந்து ஒரு நாளைக்குப் பாருங்கள் என்றாள். அவள் இதை சொன்னது தான், என்னுடன் இருந்தவர்கள் உனக்கும் வேலை இல்லை, இந்தத் துருப்புகளுக்கும் வேலை இல்லை என்றார்கள். அதற்கு அவள் நீங்கள் இந்த மாதிரி சொல்லுவீர்கள் என்று தான் நான் முதலில் உங்களுக்கு விபரம் சொல்லவில்லை என்றாள். ஆனால், நானும் மைதிலியும் மாத்திரம் அடுத்த தடவை அவள் போகும்போது அவளுடன் வருவதாய்ச் சொன்னோம். முதல் தடவை அவளுடன் போய் அவர்கள் துருப்புகளுக்குச் செய்யும் உபகாரத்தைப் பார்த்ததுமே, எங்கள் இரண்டு பேருக்கும் மறுபடியும் போய் எங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று தோன்றிற்று. இந்த மாதிரி எத்தனை நாளாய் நடக்கிறது என்று நான் கேட்டதற்கு, போன மாதத்திலிருந்து தான் நடக்கிறது என்றாள். நான் போக ஆரம்பித்த பொழுது நடந்ததை விட, இப்பொழுது எத்தனையோ மடங்கு நன்றாய் நடக்கிறது. இருந்தாலும் இன்னும் நன்றாய் நடத்துவதற்குப் பண ஒத்தாசையும் சரீர ஒத்தாசையும் தேவையாய் இருக்கிறது. இந்த 'மொபைல் கான்டீன்' 1942-ம் வருஷம் ஜூன் மாதம் மேன்மை தங்கிய கவர்னர் சீமாட்டியின் தலைமையின் கீழ் ராணுவ அதிகாரிகளுடன் கலந்து பேசி ஆரம்பிக்கப்பட்டது.

### ஆரம்பித்ததின் நோக்கம்

இதை ஆரம்பித்ததின் உத்தேசம் என்னவென்றால், பட்டணத்திலும், இதைச் சுற்றி உள்ள இடங்களிலும் வந்து தங்கும் நம் இந்தியத் துருப்புகளுக்கு நம்மால் முடிந்ததைச் செய்து, அவர்களைச் சந்தோஷிப்பிக்க வேண்டும். இவர்களில், தமிழ் பேசுபவர்கள் மட்டும் அல்ல, மற்ற எல்லா ஜாதியாரும் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் மனைவி மக்களை விட்டு ஊர் ஊராய்ச் சுற்றி வருகிறார்கள். இவர்களுக்குத் தங்கள் ராணுவத்தைத் தவிர, மற்றவர்களுடன் சேர்ந்து பழகவோ, பேசவோ சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. அதுவுமல்லாமல், இவர்களில் அநேகம் பேர் பட்டணத்திற்கு வெளியே 40 மைல் 50 மைல் தூரத்தில் இருப்பதால், பட்டணத்திற்கு ஒரு நாளாவது வந்து சந்தோஷமாய்க் காலம் கழிப்பது முடியாத காரியம். ஆகையால், இப்பேர்ப்பட்டவர்களுக்கு நம்மால் முடிந்ததைச் செய்து, அவர்களைச் சந்தோஷிக்கச் செய்ய வேண்டும் என்பதே இதை ஆரம்பித்த உத்தேசம்.

முதலில் ஆரம்பித்த பொழுது ஸர் ஆர்தர் ஹோப் கிளப்பிலாவது அல்லது தங்கள் தோட்டத்திலாவது முடிந்தவர்கள் இந்தியச் சிப்பாய்கள், மாலுமிகள், ஆகாயப் படையை சேர்ந்தவர்கள் இவர்களை வரவழைத்து இவர்களுக்கு விருந்தளிப்பது என்றும் ரொம்பவும் தூரத்திலிருந்து பட்டணத்திற்கு வர முடியாதவர்களுக்கு, பணம் வசூலித்து 'மொபைல் கான்டீன்' மூலமாய்க் கொண்டு போய்க் கொடுப்பது என்றும், ராணுவ ஆஸ்பத்திரியில் இருக்கும் சிப்பாய்களைப் போய்ப் பார்த்து அவர்களுக்கு முடியுமான சௌகர்யங்களைச் செய்து கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### படையினருக்கு விருந்துகள்

முதலில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஸர் ஆர்தர் ஹோப் கிளப்பில் சிப்பாய்கள், உத்தியோகஸ்தர்கள், மாலுமிகள், ஆகாயப் படையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து 110 பேர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. அநேக 'காம்பு'களிலிருந்து அங்கே வந்து சேர்ந்திருந்ததினால் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து பழக சமயம் ஏற்பட்டது. ஆபீஸர்கள் மற்ற ஆபீஸர்களுடன் சேர்ந்து பழக, சமயம் வாய்த்ததைப் பற்றி அடிக்கடி சொல்லி சந்தோஷப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்தளிப்பது தவிர, வேடிக்கையாகக் காலம் கழிப்பதற்காக, பாட்டுக் கச்சேரியோ, மாஜிக் பண்ணுகிறவனையோ ஏற்பாடு செய்கிறோம்.

ஆஸ்பத்திரியில் இருக்கும் சிப்பாய்களை வாரத்திற்கு ஒருமுறை போய்ப் பார்த்து, அவர்களுக்குப் பழங்கள் மிட்டாய்கள், சிகரெட்டுகள் கொடுக்கப்படுகின்றன. பொழுது போக்குவதற்காக அநேக பாஷைகளில் போர்க் கதை புஸ்தகம், வாராந்திரப் பத்திரிகை இவைகளைச் சேகரித்துக் கொண்டு போய்க் கொடுக்கிறோம். அங்கே மாதக் கணக்கில் படுக்கையாய் படுத்திருப்பவர்களுக்கு க்ரோஷர், பின்னல், பூவேலை இந்த மாதிரி கை வேலைகளைச் சாமான்களைக் கொண்டு போய்க் கொடுத்து கற்றுக் கொடுக்கிறோம். அவர்கள் இந்த மாதிரி வேலைகளை அதி சீக்கிரத்தில் கற்றுக் கொண்டு ரொம்பவும் அழகாகச் செய்கிறார்கள். சில சமயங்களில் பாடத் தெரிந்தவர்கள் நல்ல பாட்டுக்களைப் பாடி அவர்களைச் சந்தோஷப்படுத்துகிறார்கள். நல்ல கதைப் புத்தகங்களைக் கொஞ்ச நேரம் படித்துச் சொன்னால் அவர்கள் அதை ரொம்ப ஆனந்தத்துடன் கேட்கிறார்கள். சில சமயங்களில் கடிதங்கள், அவர்களுக்காக அவர்கள் சொல்வதை, எழுதி கொடுப்பதுமுண்டு. நாம் செய்யும் இந்த மாதிரி உபகாரங்கள் கொஞ்சமாய் இருந்த போதிலும் இதனால் அவர்களுக்கு ஏற்படும் ஆனந்தம் சொல்லி முடியாது.

### பத்திரிகைகளும் புத்தகங்களும் தேவை

வாராந்திரப் பத்திரிகைகள், பேப்பர்கள், கதைப் புஸ்தகங்கள் எந்த பாஷையில் இருந்தாலும் இவர்களுக்கு கொடுத்து உதவினால் ரொம்ப உபகாரமாய் இருக்கும். பல பாஷை தெரிந்த பல பேர்கள் முன்னுக்கு வந்து, இந்த மாதிரியான உபகாரங்களைச் செய்தால், எவ்வளவோ நன்றாய் இருக்கும்.

பட்டணத்திற்கு வெளியில் இருக்கும் சிப்பாய்களுக்கு, ராணுவ அதிகாரிகளின் உத்தரவின் பேரில், மூன்று தடவை போகிறோம். ஒவ்வொரு தடவையும் மூன்று தினுசு பலகாரங்கள், டீ இவைகள் கொடுக்கிறோம். வெய்யில் நாளில் ஐஸ் கிரீமும் கொடுக்கிறோம். ஒவ்வொரு தடவையும் 600 அல்லது 700 பேர்களுக்கு எடுத்துப் போகிறோம். ஏ.ஆர்.பி. அவர்களுடைய 'மொபைல் கான்டீன்' ஒன்று ஏ.ஆர்.பி. கண்ட்ரோலருடைய அன்பார்ந்த அனுமதியின் பேரில், எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில், அடிக்கடி நம்முடைய கவர்னர் சீமாட்டியும் வந்து உதவிபுரிகிறார். மற்றும் அநேக ஸ்திரீகளும், புருஷர்களும் வந்து உதவி புரிகிறார்கள். சில சமயங்களில் 60, 70 மைல் தூரம் வரைப் போய் வருகிறோம். நாங்கள் போய்ச் சேர்ந்து 10 நிமிஷத்திற்குள், மேஜையை விரித்து ப்ளேட் டம்ளர் எல்லாம் எடுத்து வைத்துக் கொடுக்கத் தயாராய் விடுகிறோம். நாங்கள் தயாராய் விட்டோமென்று சொன்னதும், அங்கு இருக்கும் தலைமை உத்தியோகஸ்தர் அவர்களை வரிசையாய் வந்து வாங்கிக் கொள்ளும்படி உத்திரவு கொடுப்பார். உடனே அத்தனை பேர்களும் வரிசையாய் சந்தோஷத்துடன் வந்து வாங்கிப் போவார்கள். அவர்கள் சாப்பிட்டானதும், அங்கேயே எங்களில் ஒருவர் தனியாய் மேஜை ஒன்று போட்டு, அவர்களுக்கு வேண்டுமான சாமான்களை விற்கத் தயாராய் இருப்பார். அங்கு, அவர்களுக்கு வேண்டும் சாமான்கள், ஸோப், பூட் பாலிஷ், தேங்காய் எண்ணெய், கைக்குட்டைகள் இந்த மாதிரியான சில முக்கியமான சாமான் விற்கப்படுகின்றன. இந்தச் சாமான்களை மொத்தத்தில் வாங்கி, அவர்களுக்கு லாபம் வைக்காமல், அதே விலைக்குக் கொடுக்கப்படுகிறது. இதற்குப் பிறகு, எங்களில் பாடத் தெரிந்தவர்கள் நல்ல தமிழ் அல்லது ஹிந்துஸ்தானி பாட்டுக்களைப் பாடி, அவர்களைச் சந்தோஷமடையச் செய்வதும் உண்டு. சில சமயங்களில் வித்தை செய்பவனை அழைத்துப் போய் அந்த விதமாய்ச் சந்தோஷிக்கச் செய்வதும் உண்டு. சில சமயங்களில் அவர்களுக்குத் தெரிந்த பாட்டுகளைப் பாடியோ அல்லது அந்தப் பக்கத்து நாட்டியங்களை ஆடியோ எங்களுக்குக் காண்பிப்பதும் உண்டு. நாங்கள் திரும்பும் பொழுது அவர்கள் ஆவலுடன் எங்களை மறுபடியும் எப்பொழுது வருவீர்கள் என்று கேட்பதைப் பார்க்கலாம். இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரம் துருப்புகளுக்கு மேல் கொடுத்திருக்கிறோம்.

### பொது மக்கள் உதவி வேண்டும்.

இதற்கெல்லாம் நம் பட்டணத்தில் உள்ள அநேக கனவான்கள் மிகுந்த அன்புடன் கொடுத்து ஒத்தாசை செய்வதினால் தான், ஒவ்வொரு தடவையும் 600, 700 பேர்களுக்கு கொடுக்க முடிகிறது. இன்னும், இந்த மாதிரி கொடுக்க முடிந்தவர்கள் மொத்தமாகவோ மாதாந்திரமாகவோ கொடுத்து ஒத்தாசை செய்தால், மிகுந்த உபகாரமாய் இருக்கும்.

நாங்கள் செய்யும் உபகாரம் மிகுந்த கொஞ்சமாய் இருந்த போதிலும் அதனால் அவர்களுக்கு உண்டாகும் சந்தோஷத்தை நீங்கள் ஒரு தடவை வந்து நேரில் பார்த்தால் தெரியும். நான் மேற் சொன்னவைகளில் எந்த விதத்திலாவது யாருக்காவது ஒத்தாசை செய்ய வேணுமென்றிருந்தால், தயவு செய்து அகில இந்திய வானொலி நிலையத்திற்கு எழுதி மற்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# யுத்த காலத்தில் அரசாங்க உதவி

## நீலகிரி ஜில்லா

ஜனங்களுடைய யுத்த காலக் கஷ்டங்களை எவ்விதத்தில் குறைக்க முடியுமோ அவ்விதங்களில் குறைத்து மக்களுக்கு உதவி புரிந்து வந்திருக்கின்றனர், நீலகிரி ஜில்லா தேசியப் போர் முன்னணியின் ஊழியர்கள். முக்கியமாக அரிசி பங்கீடுத் திட்டத்தில் அதிகாரிகளுக்கு உதவியுள்ளார். உதவி அமைப்பாளர் திரு. மு. ஹாலைய்யா. ஏனைய பிரசாரகர்களும் அவ்வாறே உதவியுள்ளனர். யுத்தத்திற்குச் சென்றுள்ள இந்திய வீரர்களது குடும்பங்களுக்கு வேண்டிய உதவியையும் மற்றும் செளகரியங்களும் செய்து வந்துள்ளனர்.

## செங்கல்பட்டு ஜில்லா

சென்ற மாதத்தில் (ஜனவரி) ஜில்லா பூராவும் அறுவடை நடந்து விட்டது. பயிரிடுவோர் மறுபடியும் உழவு பூர்த்தியாகி அநேக இடங்களில் நடவும் முடிந்து விட்டது. வருகிற சித்திரைத் திங்களில் நல்ல பலன் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 200 கிராமங்கள் தவிர, மற்ற எல்லா விடங்களிலும் நெல் பயிர் சாகுபடி செய்திருக்கிறார்கள். ஏரிகள் முன் நிகழ்ந்த வெள்ளத்தினால் உடைபட்டுபோன கிராமங்களில் சாகுபடி செய்ய முடியவில்லை. இப்பொழுது ஜில்லாவிற்குத் தேவையான நெல், மதுராந்தகம், செங்கல்பட்டு, உத்திரமேரூர் முதலிய இடங்களில் சேமிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா கலெக்டர் அவர்கள் அடுத்த சித்திரை அறுவடை முடிந்த பிறகு, தான் அரிசி நிலைமையை சீர்தூக்கிப் பார்த்து, அதற்குப் பின்னர் விலை வாசிகளை நிர்ணயிப்பதற்கும், தவிர, நமது ஜில்லாவிற்கு போதுமான அரிசி வைத்துக்கொண்டு மிகுதியை வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பவோ யோசிக்க கூடுமெனவும் சமீபத்தில் நடந்த உணவுக் கூட்டத்தில், முடிவுகள் தெரிவித்திருக்கிறார்.

சைதாப்பேட்டையில் விறகு நெருக்கடி அதிகமாக இருந்தும், சமாளித்து வருகிறார்கள். இப்பொழுது, காஞ்சீபுரம், செங்கல்பட்டு நகரங்களில் பிப்ரவரி 6-ந் தேதி அரிசிப் பங்கீடுத் திட்டம் அமுலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஜில்லாவில் சென்னை நகருக்கு குடிதண்ணீர் வசதிக்காக கட்டப்பட்ட "பூண்டி நீர் தேக்கம்" இம்மாதம் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இப்பொழுது ஜில்லாவில் எல்லா தாலூக்காக்களிலும் முன் இருந்த நெருக்கடி இல்லை. சாதாரணமாக மண் எண்ணெய், சர்க்கரை, நல்லெண்ணெய் முதலியவை கிடைக்கின்றன.

இராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கும் படைகளுக்குத் தேவையான நன்மைகளை உதவுவதற்காக காஞ்சீபுரத்தில் ஜில்லா கலெக்டர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் நடனக் கச்சேரி நடத்தப்பட்டு, அதன் வருவாயை பூராவாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

---

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

கூடிய இந்தப் பருவத்தில் நாஜிகள், ஒரு காரியம் செய்யலாம். ஜெர்மன் தொழிற்சாலைகள் மீது குண்டுகள் வீசப்படுவது பற்றி, தாம் பழிவாங்கப் போவதாகக் கூறி ஜெர்மன் பொது மக்களைச் சமாதானம் செய்து கொண்டிருந்தார்களல்லவா? அதன்படி பிரிட்டனை ஒருக்கால் ஒரு சில விமானங்களைக் கொண்டு தாக்கவும் கூடும். அன்றியும் தாக்குவதற்காக ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும் ஏராளமான தளவாடங்களையும் சப்ளைகளையும் சேதப்படுத்த அவர்கள் முயற்சிக்கக் கூடும். விமானங்களைக் கொண்டு அவர்கள் அப்படிச் செய்ய முடியும். சில விமானிகள் தம் உயிரை இந்தப் பணியின் பொருட்டு இழக்கச் சித்தமாயிருக்கிறார்களாம். இப்போது ஐரோப்பாவில் அவர்களிடம் 2,000 முன்னணி விமானங்களிருக்கின்றன.

எதிரி எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கக் கூடும் என்பது பற்றி, சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் சமீபத்தில் செய்த தோர் பிரசங்கத்தில் கூறியதாவது :—

"அடுத்த மாதங்களில் எதிரியின் கடுமையான படையெடுப்பைச் சமாளிக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டியிருக்கிறது போர் முனைகளில் மட்டுமன்றி, தொழிற்சாலைகளிலும் 1944-ம் வருஷம் மகா கஷ்டமான வருஷமாகத் தான் இருக்கப் போகிறது."

இப்போது பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் எல்லாம் வெகு தீவிரமாக வேலை செய்கின்றன. ஆண் தொழிலாளர்கள் இல்லாத குறைபாட்டைப் பெண் தொழிலாளர்கள் ஒத்துழைத்துப் போக்கி விட்டார்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களில் பாதிப் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்.

வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத மூன்று வகை உயர்வுகளில் இரண்டு வகைகளைப் பற்றி மட்டும் ஒருவாறு குறிப்பிட்டோம். மூன்றாவது, மனோ பல உயர்வு. இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. இங்கிலாந்துக்கு 20 மைல்களுக்கப்பால் எதிரி வெகு ஊக்கத் தோடும் எச்சரிக்கையோடும் போர்க் கோலங் கொண்டு நிற்கிறான்; ஆனால், பிரிட்டிஷ் பொது மக்களோ, அதைப் பொருட்படுத்தவே கிடையாதென்று சொல்லலாம். யுத்தம் முடிந்த பிறகு அமைக்கப்பட வேண்டிய மீட்சித் திட்டங்களை வகுக்கிறார்கள். அரசியல் துறையிலும் சமுதாயத் துறையிலுமுள்ள கருத்து வேற்றுமைகளைக் குறித்து விவாதிக்கிறார்கள். படைகளை முன்னிட்டும் மீட்சிப் பருவத் தேவைகளை முன்னிட்டும், பிரிட்டிஷ் பொது மக்கள், தம் உணவு சம்பந்தமாக மிகவும் சிக்கனத்தைக் கையாண்டு சேர்த்து வைக்கிறார்கள். தங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் பங்கீட்டு உணவைக் குறைத்துக் கொள்ள தாமாகவே முன்வந்தனர். மிக உயர்ந்த யுத்த வரி அவர்களிடம் வசூலிக்கப்படுகிறது. என்றாலும், யுத்தத் தளவாட உற்பத்தியை முன்னிட்டு 48 கோடி பவுனும், யுத்தக் கப்பல் உற்பத்தியை முன்னிட்டு $54\frac{1}{2}$ கோடி பவுனும், விமான உற்பத்தியை முன்னிட்டு $61\frac{1}{2}$ கோடி பவுனும் கொடுத்துதவி யிருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து பிரிட்டிஷ் பொது மக்களின் மனோ பலம் ஒரு நாளுமில்லாத அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்று தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, ஹிட்லர், என்னதான் தலை கீழாக நின்றுத் தவம் செய்தாலும், நேச நாட்டினரின் மனோ பலத்தைச் சிதைக்கவோ, மனத் தாங்கலை நேச நாட்டினருக்குள் உண்டுபண்ணவோ முடியவே முடியாது.

---

(8-ம் பக்கம் தொடர்ச்சி.)

புரி லேசில் விழுந்துவிடுமென்று யாரும் எண்ணிக் கொண்டிருக்க வில்லை. அது விழுந்துவிட்டால், இத்தாலியிலே, நாஜிப் படைகளுக்கு அதிக வேலை இராதே! ஆகவே, அவ்வளவு முக்கியம் வாய்ந்த ரோமாபுரியை நாஜிகள் எளிதில் விட்டுவிடுவார்களா ?

இந்தச் சமயத்திலே நொண்டி வீரர் முஸோலினி பேசியிருக்கும் பேச்சு தமாஷாகவே இருக்கிறது. 'ஹே' பாஸிஸக் கட்சி வீரர்களே! ரோமாபுரியை தற்காலிகமாக ஜெர்மானியர் பாதுகாக்கிறார்கள். முன்காலத்தில் எல்லாம் இத்தாலியர்கள் இந்நகரைக் காக்க எத்தகைய வீரத்தைக் காட்டியிருக்கிறார்கள் ? 'இப்பொழுது ஜெர்மானியரைச் சண்டை செய்ய விட்டுவிட்டு, நாம் சும்மா இருப்பது இத்தாலியருக்கே அவமானமாச்சே! இன்னும் அதிகப்படியான ஆட்களைச் சேர்க்கவேண்டும். இன்னும் நிறைய ஆயுதங்களைத் தயாரிக்கவேண்டும். ஜர்மானியருடன் ஒற்றுமையாக நின்று போராடவேண்டும். அவர்களுக்கும் நமக்குமிடை உண்மையிலே நேசம் இருக்கிறது என்பதை தினம் நிரூபிக்கவேண்டும்' என்று பபூன் நாடகமேடையில் ராஜா தர்பார் நடத்துவதுபோல் வேடிக்கையாகப் பேசியிருக்கிறார்.

அவருக்கு எங்கிருக்கிறது சைனியம் ? ஆயுதங்கள் தயாரிக்க எங்கிருக்கிறது தொழிற்சாலை ? பேச எங்கிருக்கிறது வாய் ? பல்லெல்லாம் போய், படுகிழமாகி, சாகவேண்டியதே பாக்கி. இப்பொழுது பேச்சென்ன வேண்டியிருக்கு இந்த முஸோலினிக்கு !

இந்த முஸோலினிக்கு ஏற்பட்ட கதியை விட உயர்ந்த கதி ஒன்றும் ஹிட்லருக்குக் கிடைத்து விடப் போவதில்லை. கடைசியாக அவர் நேசதேசத்தார்கள் முன் விசாரணைக்கு வந்து நிற்கத் தான் போகிறார். அவர் முகத்திலே கரியைப் பூசத் தான் போகிறார்கள்.

ஆனால் அதற்கு முன் ஹிட்லர் பிரிட்டிஷார் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளவென்று, ஆத்திரத்தோடு, விமானங்களை அங்கனுப்பி விஷவாயு பிரயோகம் செய்யச் சொல்லலாம். அந்த கோரம் வேறே இருக்கிறது இன்னமும். அதற்கு பிரிட்டிஷார் சித்தமாகவே இருக்கிறார்கள். ஆலகால விஷத்தை ஆவெனப்பருகிய ஆதி சிவன் போல, விஷவாயுவைச் சமாளிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். நீர்மூழ்கிப் போர், விமானப் போர், நூதன வெடிகுண்டுப் போர் எல்லாம் தீவிரமாக நடத்தி ஹிட்லர் எப்படி அபஜயமடைந்தாரோ, அதே போல் இந்த விஷவாயுப் போரை நடத்தினாலும், தோல்வியே பெறுவார். பதிலுக்குப் பதில் அவரது நாட்டு மக்களும் அதன் ருசியைத் தெரிந்து கொள்ள வேண்டி வரலாம். அதற்கு இடம் கொடுக்காமலிருப்பாரா இந்த மடசாம்பிராணி ? அந்த புத்திசாலித்தனம் அவருக்கு இருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. "விநாசகாலே விபரீத புத்தி" என்பது தானே பழமொழி, ஹிட்லர் உருப்படுகிறவராக இருந்தாலல்லவா ஒழுங்கான காரியத்தைச் செய்யப் போகிறார் ? ஆதிமுதலே அனைத்தும் அசட்டுக் காரியங்களாகவே தானே செய்துவருகிறார். அதன் பலனை அவர் அநுபவிக்கத் தான் போகிறார். அவர் செய்த அட்டூழியங்கள் எல்லாம் குறிப்புப் புஸ்தகத்தில் ஏறியிருக்கின்றன. எல்லாம் பிறகு வெட்ட வெளிச்சமாகும் பாருங்கள்! அப்பொழுது 'ஐயோ' அநியாயமே! என்று தான் பிரமிக்கப் போகிறீர்கள்.

## சென்னை மக்களின் தாராளம்

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், சென்னை கவர்னர் மேன்மை தங்கிய ஸர். ஆர்தர் ஹோப் அவர்களுக்குக் கீழ்க்கண்ட தந்தியை ஜனவரி மாதம் 28-ம் தேதி அனுப்பினுர் :—

மேலும் தாங்கள் அனுப்பிய மகத்தான கொடை 1,850 பவுனையும் நன்றியுடன் பெற்றுக் கொண்டேன். போர்முனைகளில் மிகச் சிறந்த முறையில் போராடும் பிரிட்டிஷ் விமானப் படைகளுக்கு விமானங்கள் உதவும் வகையில், மிகச் சிறந்த உதவியை சென்னை மக்கள் தாராளமாகப் புரிந்திருக்கிறுர்கள்.



அரக்கான் போர்முனையில் மேன்மைதங்கிய லார்ட் லூயி மௌண்ட்பாட்டன் பிரபு இராணுவ வைத்தியப் படையைச் சேர்ந்த 'நர்ஸ்'களுடன் பேசுகிறுர்.

# "நாங்கள் எல்லாம் செய்கிறேம்"

## போர் முனையில் ஐ.இ.எம்.இ. படையின் அருந் தொண்டு.

இடம் இந்தோ பர்மா போர் முனை. அவசரச் சங்கு ஒலித்தது. வெகு சீக்கிரத்தில் மின்சார இஞ்சினீர்களும் இயந்திர இஞ்சினீயர்களும் தம்தம் வேலைத் தலங்களுக்கு விரைந்தனர். அவர்கள் தம் வேலைகளைக் கண் கவரத் தக்க முறையில் முன் யோசனையோடு செய்து முடித்தார்கள். திடீரென்று ஜப்பானியர்கள் தாக்குவதனுல், தனிப்பட்ட இடத்திலிருக்கும் இந்தியர்களும் பிரிட்டிஷாரும் சேர்ந்த படையினருக்கு ஏற்படக்கூடிய பேராபத்தை அவர்கள் தவிர்க்கக் கூடும்.

முற்போக்கான இடத்தில் துருப்புகள் இருந்தன. அன்றிரவு மழை கடுமையாகப் பெய்தது. இந்த இடத்திற்கும் படையின் தளத்திற்கும் இடையே யிருந்த ரோட்டை வெள்ளம் அரித்துக் கொண்டு போய்விட்டது. அதே சமயத்தில், ரோந்து போய்வந்த சாரணர்கள், ஜப்பானியர்கள் திரண்டு தம்மைத் தாக்குவதற்கு ஆயத்தமாகிருர்க ளென்று கூறினர்.

உதவிப் படையும் தளவாடங்களும் தேவை ; அதுவும் உடனடியாகத் தேவை. இந்தத் துருப்புக்கள் முன்னேறிப் போவதற்கு நூற்றுக்கணக்கான மோட்டார் லாரிகள், அரித்துக் கொண்டு போகப்பட்ட ரோடுகளைக் கடந்து வந்து சேரவேண்டும். இந்த வேலையைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஐ.இ எம்.இ.-யைச் சேர்ந்த சிறு கூட்டத்தினருக்கு ஏற்பட்டது. மற்ற படைகளிட மிருந்த ஓட்டை லாரிகளையும் கம்பி முடுக்கிகளையும் இரவல் வாங்கினுர்கள். கம்பியில் ஓடும் ரயில்வேயை முன் யோசனையோடு அமைத்தார்கள். அந்த சீர்கேடான ரோட்டின் வழியாக இரவும் பகலும் மணித்தோறும் தளவாடங்கள் போய்க் கொண்டிருந்தன.

முக்கியமான வண்டிகள் தக்க சமயத்தில் வந்து சேர்ந்தன. துருப்புகளுக்குப் பக்கபலம் வந்து விட்டது. ஜப்பானியர்களும் விரட்டி யடிக்கப் பட்டனர். இந்த ஐ.இ.எம்.இ. படையினர் தம் வழக்கப்படி மற்ருெரு வேலையும் செய்கிருர்கள்.

சென்ற வருஷம் மே மாதந் தான் இந்தப் படை அமைக்கப்பட்டது. வெற்றிகரமாக ஊழியம் செய்த ஆர்.இ.எப்.இ.யைப் போலவே, இதையும் அமைத்தார்கள். இந்த ஆர்.இ.எப்.இ.யே இந்த யுத்தத்தின் போது தான் ஏற்பட்டது. தொழிலாளர்கள் தான் கைதொழில் பற்றிய வேலைகளைச் செய்ய கூடியவர்கள் என்ற நம்பிக்கையின் பயனுகத் தான் இது ஏற்பட்டது.

"எல்லாம் எமது தொழில்" என்பது தான் இந்தப் படையின் கொள்கை. அவர்கள் செயல்கள் காரணமாகத் தான் இந்தக் கொள்கை அவர்களுக்கு ஏற்பட்டது. ஏனென்ருல், இராணுவத்திற்கு தேவையான எல்லாம், கடிகாரம் முதல் பெரிய பீரங்கிகள் வரை, டைப் அடிக்கும் மிஷின் முதல் டாங்கிகள் வரை தயார் செய்து கொடுக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்புத் தான்.

இவர்களுடைய கடமைகளைக் குறித்து மெகானிகல் இஞ்சினீரிங் டைரக்டர் மேஜர் ஜெனரல் டி. ஆர். டருவிட் சுருக்கமாகக் கூறியதாவது :

"பழுதான தளவாடங்களை அப்போதைக் கப்போது பழுது பார்ப்பதும், அவற்றை உடனே போராடும் படைகளுக்கு அனுப்புவதும், கூடியவரையில், பழுதான தளவாடங்கள் திருப்பி யனுப்பப்படாமல் போர் முனைகளிலேயே பழுதுபார்ப்பதும் தான், இவர்கள் வேலை."

இந்தப் படை 4 வகைப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. முதலாவது வெகு சிலரைக் கொண்ட உதவித் துருப்பு. இது போர் முன்னணிகளில் முன்னேறி எளிதில் போகக் கூடியவை. 2-வது பகுதி, போர்க் களத்தை யடுத்து அமைக்கப்படும் தொழிற்சாலைப் பகுதி. இது ஒரு இடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எளிதில் மாற்றப்படக் கூடியது. 3-வது பகுதி, போக்கு வரவுப் பாதைகளில் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள். இவை அப்புறப்படுத்தக் கூடியவை யானுலும், இலகுவில் அப்புறப் படுத்தக் கூடியவை யல்ல. 4-வது பகுதி, போர்முனை பகுதிக்கு வெளியே தளங்களில் உறுதியாக அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள். எல்லா வகை வேலைகளையும் செய்வதற்கும், எல்லா வகைப் பழுதுகளையும் பார்ப்பதற்கும் தேவையான மிகச் சிறந்த சாதனங்க ளெல்லாம், இங்கே அமைந்திருக்கின்றன.

இந்திய வைத்தியசாலைகளுக்குரிய சத்திர சிகிச்சை ஆயுதங்களும், செயற்கை யங்கங்களும் கூடத் தயார் செய்கிருர்களென்ருல், இந்த ஐ.இ.எம்.இ. காரர்கள் எத்தனை வகைகளில் எத்தனைச் சிறந்த முறையில் வேலை செய்கிருர்களென்று விளங்கும்.

இந்தத் தொழிலாளர் படையைச் சேர்ந்தவர்கள் போராடுகிறவர்களல்ல. என்ருலும், நம் கப்பல்களை விட்டு எதிரி கரைகளில் போய் இறங்கும் போது, முதலில் போய் இறங்கும் படைகளோடு போகிருர்கள். ஏனென்ருல், அக்கரையில் பழுதடைந்திருக்கும் டாங்கிகள் முதலிய தளவாடங்களை அவ்வப்போது பழுது பார்த்து வைத்துக் கொள்ள உதவ வேண்டும். தாம் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் தளவாடங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, சில சமயங்களில் போராடும்படி நேரிடுவது முண்டு. டாங்கிகள் போர்முனைக்குக் போகும்போது, ஐ.இ.எம்.இ. காரர்களும் அவற்ருேடு, விசேஷ முறையில் அமைக்கப்பட்ட டாங்கிகளில் போகிருர்கள். அங்கே போர்முனையில் குண்டுபட்ட டாங்கிகளை பழுது பார்த்து, திரும்பவும் அந்த டாங்கிப் படைகளுக்கு உதவுகிருர்கள்.

இந்த ஐ.இ.எம்.இ. படைக்குத் தேவையான இந்திய உத்தியோகஸ்தர்களும் தொழில் நிபுணர்களும் கிடைப்பது தான் பெரும் பிரச்சினையாயிருக்கிறது. இவர்கள் தான் படைகளின் அச்சாணி போன்றவர்கள். இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டி, இந்தப் படை உத்தியோகஸ்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சிறந்த முறையில் தொழிற் பயிற்சியளிக்கப் படுகிறது. என்ருலும் இவர்கள் பயன்படுவதற்குப் பல மாதங்கள் செல்லும்.

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

முதலில் நினைத்தபடி, ரங்கூனுக்குத் திரும்பிப் போய் என் வேலையை ஒப்புக் கொள்ள முடியவில்லை.

கடைசியாக, பர்மா வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என்பது பற்றி, பர்மா வியாபார சங்கத்தின் மாஜி அரசியல் அமைச்சரும், ஜெனரல் அலெக்சாந்தரின் பிரதம லியெய்சான் ஆபீசருமான மிஸ்டர் தாமஸ் லூயிஸ் ஹ்யூஸ் கூறியதையே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சென்ற நவம்பர் மாதம் 3-ம் தேதி லண்டனில், 'ஏஷியன் சொஸயடி'யில் அவர் பேசிய போது கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

"அதிகமான படைகளும், டாங்கிகளும், பீரங்கிகளும், விமானங்களும் இருந்திருந்தால் நிலைமை மாறியிருக்கும்."

விரைவில் அங்கே நிலைமை மாறக் கூடுமென்று பர்மாவிலிருந்து திரும்பி வந்துள்ள நாம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேம். இந்த மாறுதல் ஆரம்பமாக வேண்டுமானுல், ஜெர்மனியை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டுமென்று நமக்குத் தெரியும். நேச நாட்டினர் பூரண வெற்றி பெற்ற பிறகு, நாம் ஸ்வீகரித்துக் கொண்ட நாட்டிற்குத் திரும்பும் நாளை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேம்.

### வானெலி நாட் குறிப்புக்கள்.

சென்னை 8—2—44 மாலை 7-மணிக்கு "யுத்த விமர்சம்"—த. பா நித்தியானந்தம்,

சென்னை 9—2—44 மாலை 7-மணிக்கு "யுத்த முயற்சி."

# யுத்த நாட் குறிப்புக்கள்

## பிரிட்டனும், ஜெர்மனியும்.

**ஜனவரி** 27.—அச்சுநாடுகளைவிட்டு அர்ஜெண்டைன் அரசாங்கம் விலகிக்கொண்டது சம்பந்தமாக, மிஸ்டர் ஆன்டனி ஈடன் ஒரு அறிக்கை விடுத்தார்.

யுத்தத்திற்குப் பிறகு நடைபெறவேண்டிய வியாபாரம் முதலிய பல பொது விஷயங்களையும் குறித்து இந்தியா அரசாங்கம் உள்ளிட, எல்லா சாம்ராஜ்ய நாடுகளுடனும் கலந்து ஆலோசிக்கப்படுவதாக மிஸ்டர் அட்லி, காமன்ஸ் சபையில் கூறினர்.

**ஜனவரி** 28.—ஜப்பானியர் வசமுள்ள பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளையும் அடைபட்டுக் கிடப்பவர்களையும் அவர்கள் நடத்தும் முறை பற்றி, மிஸ்டர் ஈடன் நீண்டதோர் அறிக்கை வெளியிட்டார்.

இரண்டாம் போர்முனை ஆரம்பமாகும் போது, ஜெர்மானியர்களும் இங்கிலாந்தையும் தாக்குவார்கள் என்று பிரிட்டிஷ் ஏ.ஆர்.பி. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் விங் கமாண்டர் ஹாட்ஸால் எச்சரித்தார்.

**ஜனவரி** 29.—தான் ஆதிக்கம் பெற்ற 11-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, ஹிட்லர் தன் குடிகளுக்கு ஒரு வானெலிப் பிரசங்கம் செய்தார்.

''சீன இராணுவ கமிஷன் லண்டன் வந்து சேர்ந்தது.

## அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

**ஜனவரி** 26.—இளவேனிற்காலத்தில் நடைபெறப்போகும் அமெரிக்கத் தலைவர் தேர்தலில் அமெரிக்கப் படையைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளலாம் என்று அனுமதிக்கும் மசோதா, பொருளற்றதென்றும், வீணனதென்றும் மிஸ்டர் ரூஸ்வெல்ட் அதைக் கண்டித்தார்.

**ஜனவரி** 28.—கரிபியன் பகுதியிலிருந்து ஸ்பெய்னுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது.

**ஜனவரி** 29.—உலகத்திலேயே மகா பலமுள்ள போர்க் கப்பல் **மிஸ்ஸௌரி** (45,000 டன்), கடலில் இறக்கப்பட்டது.

**ஜனவரி** 30.—யூதர்களை நாஜிகள் வேட்டையாடுவதைத் தடுத்துப் போராடும்பொருட்டு, அமெரிக்காவில் ஒரு தேசீயக் கமிட்டி அமைந்திருக்கிறது.

## இந்தியா, பர்மா, இலங்கை.

**ஜனவரி** 26.—நியூ டில்லியில் வைசிராய் நிர்வாக சபைக் கூட்டமொன்று நடைபெற்றது.

**ஜனவரி** 27.—காமன்ஸ் சபையில் இந்தியா பற்றிய பல கேள்விகளுக்கு மிஸ்டர் அமெரி விடையளித்தார்.

**ஜனவரி** 28.—ஜப்பானியர்களிட மிருக்கும் யுத்தக் கைதிகளையும் அடைப்பட்டிருப்பவர்களையும் அவர்கள் எவ்வளவு பயங்கரமான முறையில் நடத்தினர்கள் என்பது பற்றி ஒரு புத்தகம் வெளியிடுவ தென்று இந்தியா அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கின்றனர்.

**ஜனவரி** 29.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு புது டில்லிக்குத் திரும்பி வந்தார்.

**ஜனவரி** 31.—பர்மா போர்முனையில் சென்ற சில நாட்களாக நடைபெற்ற போராட்டம் பற்றிய தோர் இராணுவ அறிக்கை வெளியானது.

## ரஷ்யாவும் பின்லந்தும்.

**ஜனவரி** 26.—லெனின்கிராடை ஜெர்மானியர்கள் முற்றுகையிட்டபோது அவர்களுடைய பலமான அரணயிருந்த **கெட்சினவை** ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

போலந்து-ரஷ்யா தகராறு சம்பந்தமாக, தான் சமரசம் செய்வதாக அமெரிக்கா கூறியதை, ரஷ்யா ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஜனவரி** 27.—டோஸ்னே ஜில்லாவின் தலை நகரத்தையும், வலொசோவா என்னும் ரயில்வே ஜங்ஷனையும் ரஷ்யர்கள் கைப்பற்றினர். லுகா நோக்கி சோவியத் டாங்கிப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

"க்ஸின் காட்டூ" காட்டில் ஜெர்மானியர்கள் நடத்திய கோரச் செயல்களைக் குறித்து விசாரிக்கும் பொருட்டு ஏற்பட்ட சோவியத் கமிஷன், நேற்று தன் அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது.

**ஜனவரி** 28.—**லியுபான்** என்னுமிடத்தை செம்படைகள் கைப்பற்றி, படெஸ்கியா-ட்னே ரயில்வே லைனையும் வெட்டிவிட்டனர்.

சோவியத் யூனியனைச் சேர்ந்த ஒவ்வொரு அரசாங்கமும் தனித்தனியாக பிற அரசாங்கங்களோடு தொடர்பு அமைத்துக் கொள்ளுவதற்கு உரிமை கிடைக்கத் தக்கபடி, சோவியத் யூனியனின் அமைப்பு மாற்றி யமைக்கப்படுமென்று உத்தியோக தோரணையில் அறிவிக்கப்படுகிறது.

**ஜனவரி** 29.—ஜெர்மன் அரண்களான **சுகுவோ, நோவோ-சொகேலினிசி** ஆகியவற்றை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

**ஜனவரி** 30.—எஸ்டோனியாவில் நர்வாவை நோக்கி ரஷ்யப்படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

லட்வியா எல்லைப்புரத்திற்கு 66 மைல்களுக்கு அப்பாலும் கிங்கிசிப்புக்கு 12 மைல்களுக்கு அப்பாலும் சோவியத் படைகள் இருக்கின்றன.

**ஜனவரி** 31.—சோவியத் விமானப்படைகள் எஸ்டோனிய எல்லைக்கு 10 மைல் தூரத்திலிருக்கின்றன.

## இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

**ஜனவரி** 26.—மான்டி-சிரகோலியை பிரிட்டிஷ் 5-ம் படை கைப்பற்றியது. அமெரிக்க 5-ம் படை காசினோவுக்குத் தெற்கே ராபிடோ ஆற்றைக் கடந்து காசினோவுக்குள்ளும் ரோந்துப் படைகள் புகுந்துவிட்டன.

ரோமாபுரிக்கு 25 மைல் தூரத்தில் நேச நாட்டுப் படைகளிருக்கின்றன.

**ஜனவரி** 27.—இத்தாலியப் போர் நிலைமை பற்றி அமெரிக்க யுத்த மந்திரி ஒரு அறிக்கை விடுத்தார்.

முசோலினியின் உடல் நிலை மேலும் அதிகமாகக் கெட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**ஜனவரி** 30.—நேச நாடுகளுக்கு விரோதமாகப் போராடும்படி இத்தாலியர்களை முசோலினி தூண்டுகிருர்.

**காண்டிநீரா, கடகொட்டா, கம்போமார்டா, பார்கோமான்டெல்ஸ்** ஆகிய இடங்களை 5-ம் படை கைப்பற்றியது.

**ஜனவரி** 31.—மத்தியதரைக் கடற்பகுதி கடற்படைத் தலைவர் அட்மிரல் சர் ஜான் கனிங்ஹாமும் நாடினே கடற்படைத் தலைவரான (அமெரிக்கர்) அட்மிரல் பிராங்க் லௌரியும் ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பலில் கலந்து பேசினர்கள்.

## விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

**ஜனவரி** 27.—மார்ஷல் டைட்டோவின் எதிர்த்தாக்குதல் காரணமாக போஸ்னியாவிலிருந்து ஜெர்மானியர்கள் ஒழிந்தார்கள். அவருடைய படைகள் **ப்ருயெனேவைக்** கைப்பற்றிக் கொண்டன.

**ஜனவரி** 31.—"இதுவல்ல சமயம்" ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்கென்று யுகோஸ்லாவ் பிரதம மந்திரிக்கு ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

## நடு நிலைமை நாடுகள்.

**ஜனவரி** 27.—ஸ்பெய்ன் நடுநிலைமைபற்றி அதன் அன்னியநாட்டு மந்திரி ஒரு அறிக்கை வெளியிட்டார்.

**ஜனவரி** 31.—ஸ்பெய்ன் தேசத்திலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் சர் சாமியல் ஹோர், ஜெனரல் ப்ராங்கோவோடு கலந்து பேசியதாகத் தெரிகிறது.

பிரிட்டனிலுள்ள ஸ்பெய்ன் ஸ்தானீகரான அல்பா பிரபு மாட்ரிட் வந்து சேர்ந்தார்.

## தூரக் கிழக்கு நாடுகள்.

**ஜனவரி** 26.—ஜெனரல் மெக்கார்தர் "டிஸ்டிங்குவிஷ்ட் சர்விஸ்" பதக்கம் பெற்றார்.

டோக்கியோவைச் சேர்ந்த 15 ஜில்லாக்களும், நகயோகா என்னும் கைத்தொழில் பகுதியைச் சேர்ந்த 8 ஜில்லாக்களும் காலி செய்யப்படுமென்று தெரிகிறது.

**ஜனவரி** 27.—கொரியா விரிகுடாவிலுள்ள சிம்மான் துறைமுகத்திலுள்ள 5 ஜப்பானிய சாமான் கப்பல்களும் ஒரு எண்ணைக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

**ஜனவரி** 28.—நியூ பிரிட்டனில் **நடாமோ** முனையை அமெரிக்கக் கப்பற்படை பிடித்துக்கொண்டது.

**ஜனவரி** 30.—ரபாலிலுள்ள லுகனுய் விமானக்கூடத்தை நேசதேச வெடிகுண்டு விமானங்கள் தாக்கி, 23 ஜப்பானிய விமானங்களை அழித்தன.

**ஜனவரி** 31.—பசிபிக் போர்முனைகளிலும், தூரக் கிழக்கிலும் 14 ஜப்பானிய கப்பல்களை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்தன வென்று அமெரிக்கக் கடற்படையிலாக்கா அறிக்கை கூறுகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.